Puthrit[torn]

or

The Tragedy of

KRISHNAKUMARI

A New Tamil Novel

by

P. Venkataraman

of

Mayavaram.

Published by

P. Rajaram Iyer & Bros.,

Mayavaram :: Kumbakonam :: Madras

THE WAVERLEY PRESS, MADRAS

மடமலர் 1.

OFFICE OF THE REGISTRAR OF
24 JAN 1911
MADRAS.

புத்ரித்ரோகி

அல்லது

கிருஷ்ண குமாரியின் துக்க ஸம்பவம்.

மாயவரம்

பி. வெங்கட்டராமன் எழுதியது.

MADRAS:

PRINTED AT THE WAVERLEY PRESS.

விலை அணா 4.] 1910. [All rights reserved.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1911
MADRAS.

TO

THE REV. WILLIAM MESTON, M.A., B.D.

MADRAS CHRISTIAN COLLEGE.

This book is dedicated

BY HIS LOVING AND GRATEFUL PUPIL

P. VENKATARAMAN.

OFFICE OF THE REGISTRAR
24 JAN 1911
MADRAS

முகவுரை.

எனது உபாத்தியாயர் இந்துதேச சரித்ர பாடத்தன்று, கிருஷ்ணகுமாரியின் துக்க ஸம்பவத்தைப் பற்றிச்சொன்னார். அவர் சொன்னவைகள் என் கண்முன் நடந்தனபோலவே தோன்றி, யானறியாக் கண்ணீர் சொரியச் செய்தன. 'கிருஷ்ணகுமாரியின் துக்கஸம்பவம்' நல்லதொரு நாவலாகும் என நினைத்து, இதையொரு நாவலாக்கினேன். இது என் மனப்போக்கு. இதிற் குற்றந்தேடுதல், மணற்சோற்றிலும் கற்றேடுவதற்கு ஒப்பாகும். இத்தகைய சிறு நாவல்கள் பல எழுதத் துணிந்துள்ளேனாதலால், இடையூறுவாராமல் காக்க, அனவரதம் விநாயகத்தை வேண்டுகின்றேன்.

PLEASURE BOWER,
Michaelmas 1910. } பி. வே.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	சரி.
1	4	கிடையாதே.	கிடையா.
11	13	செறுககு.	செருக்கு.
12	4	நடு நிலமை.	நடுவு நிலமை.
19	கடை	குறைகழல்.	குரைகழல்.
21	5	மதித்து க்கண்ணை க்காக்கும்	மதித்துக் கண்ணைக் காக்கும்
23	13	உழு சேர்த்தி	உழுதிச்சேர்த்தி.
46	கடை	Athiest.	Atheist.

புத்ரித்ரோகி

அல்லது

கிருஷ்ண குமாரியின் துக்க சம்பவம்.

அத்தியாயம் 1.

ஸ்நேஹா!! அதோபார்! ஓமை மரங்களும் பாலே மரங்களும் ஆகாயத்தை யெட்டுகின்றன. அவைகளைப் பாலே யென்றும் ஓமை யென்றும் சொன்னேன். அவைகளில் இலைகளே கிடையாதே! அது ஏன்? உன் கண்ணுக் கெட்டியவரையில், கண்ணிற்குக்குளுமை தரும் பச்சைமரங்களாவது, ஏரி குளம் குட்டைகளாவது காணப்படுகின்றனவா? அல்லது, நீ நிற்கும் பூமி உழுது பயிரிடக்கூடிய நிலமா? நீ பார்க்கும் மரங்கள் உயிரோடிருக்கின்றனவா? மரங்களென்றிருந்தால் பட்சிவர்க்கங்கள் கூடுகட்டிக்கொண்டு அங்கே நடமாட்டமுள்ளனவைகளாயிராவா? அங்கே ஏன் ஸஞ்சாரக்குறியையே காணேம்? அல்லது அங்கே மற்றவிடங்களிலுள்ள காற்று, சூரியன் சந்திரன் முதலியன விளங்கவில்லையா?

அன்று. சந்திர சூரியர், சண்டாளர்க்கும் தம் நிலா வெயிலைக்கொடுக்கிறார்கள். மரமென்றிருந் தால், அதற்கு இலைகளுண்டு. காற்று உலாவாத விடம் பூமியிலில்லை. ஆயினும் இவைகளெல்லாம் இங்கே வேறுபட்டிருக்கின்றன. மரங்களில் இலை யே கிடையாது. உற்றார் உறவினரின்றித்தனியே இறந்தால் எடுப்பவருவாரின்றிக்கிடக்கும் லக்ஷாதி காரியைப்போல், மரங்கள் ஆகாயமளாவியும், அவைகளை விளக்கும்குறியையே காணோம். இதுவோ பாலைவனம். இங்கு தண்ணீர் தங்க விடமேது? தண்ணீரேயில்லை. சூரியனோ தன் பூரணவல்லமை யோடும் தன் சிவந்த கைகளை நீட்டுகிறான். அதைத் தாங்காது, மணல் உருகி, உருகிய மணற்குழம்பு கொதிக்கும்போது அம்மரங்களெல்லாம் நாட்டியம் பண்ணுகின்றன. இதில் எவ்வாறு பயிரிடமுடியும்? பட்சிவர்க்கங்கள் எவ்வாறு இங்கேவசிக்கும்? சந்தி ரனோ, முகத்தை இந்த விடத்திற்காட்டுவதேயில்லை காற்று வீசுகின்றது. காற்றடிக்கும்போது, ஓர்வித சத்தமுண்டாகும். ஆயினும், இந்தக்காற்று ஓர் தினி சான சத்தத்தைக்கொடுக்கின்றது. அது எம்மாதிரிச் சத்தம்? அது கர்ணகடூர சத்தமாயிருக்கிறது. கடூரத்திலும் உயர்வு தாழ்வுண்டே. இது எம்மாதிரி? அந்தணனொருவன் புத்ரப்பேறின்றி நெடுநாள் தவ மிருந்து, அந்திகாலத்தில் புத்ர சம்பத்தையடைகி றான். கண்கிடைத்த குருடன்போல, மிகுந்த சந் தோஷமடைந்து அப்பிள்ளையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வருகிறான். இவ்வாறு வளர்ந்துவரும் அப்புதல்வன்,

"மகன் தந்தைக்காற்று முதவி யிவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"

என்றவண்ணமே யாவராலும் "இவன் கலாவல்லவன், சற்குணக்குன்று, ஆஹா! என்ன தேஜஸு, பிள்ளை பிறந்தாலும் இவ்வாறல்லவோ பிறக்கவேண்டும். பூர்வஜன்மத்தில் தங்கவில்வத்தாற் பூசை செய்ததனால் இந்த ஜன்மத்திலுண்டான பலன் இது தான். இதைவிட அவனைப்பெற்றோர்களுக்கு வேறே என்னவேண்டும்" எனப்புகழப்பெற்று வருகிறான். திடீரென ஜுரங் கண்டு இறக்கிறான் அப்புதல்வன். இது வறியாது, அயலூர்க்குப்போய்த் திரும்பிவரும் அப்பையனது தந்தையினிடம், ஒருவன் "ஐயா உமது புதல்வனிறந்தான்" என்று சொல்லுகிறான். அந்தோ! அவன் காதில் அவ்வார்த்தைகளின் தொனி எம்மாதிரிபடும்! அதைத்தானே "நாராசங் காய்ச்சி நடுச்செவியிற் பாய்ச்சினாற்போற்படும்" என்று சொல்வது. இக்காற்றின் தொனியோ இங்கு சொல்லிய தொனியினும் ஆயிரமடங்கு அதிக கடூரத்தைக்கொடுக்கின்றது. நமக்கு வேண்டுவன தானேயறிந்து கொடுத்து, நமது கஷ்ட நஷ்டங்களிற்றானும் கூடவிருந்து, தன்னுருவேபோல் இவ்வுலகத்தில் சிருஷ்டித்து வைத்திருக்கும் ஐயறிவுயிரான நம்மில் ஒருவன் கொலையுண்டான் என்பதையறிந்த, பரமன், ஆற்றமாட்டாத் துக்கத்தினால் வருந்துகிறான். அப்போது அவனது ஸேவகன் வாயுவு இதையறிந்து, 'தன் தாயழக்கண்ட குழந்தை யழுவதுபோல" த்தானும் அலறுகிறான். இதுதான் அந்த சத்தம்.

கொலை! இதைக் கேட்டவுடன் மயிர்க்கூச்சல் எடுக்கின்றதே. ஆவி சோருகின்றதே. மனம் பதைக்கின்றதே. வார்த்தை சொல்ல நாவெழவில்லையே. இத்தீவினை புரியும் பாவி—ஐயோ! பரமசண்டாளன் இவைகளெல்லாம் உணரானோ? "கொலைக்கு உயிரில்லாவிடினும் பேசும்" என்கிறார்களே! அதையவன் அறியானோ? அறிந்தும் அவன் அத்தீச் செயல் புரிந்தால், பிறக்கும்போதே கொலை யென்பதை உருவாகக் கொண்டுவந்தவனா? அல்லது கொலைபேசும் என்று தெரிந்தவனாயிருந்தால் "ஐயோ! இதை நாம் செய்தால் அகப்பட்டுக்கொள்வோம்; நாமுமிறக்கநேரிடும் இதனால்" என்று அஞ்சமாட்டானா? எல்லாம் உண்மையே. கொலை செய்பவன் பிறக்கும்போது உயர்ந்த குணத்தோடுபிறந்தவனே. பிறகு சகவாஸ தோஷத்தாற் கெட்டவன்.

கொலை செய்தவன் "தானாடாவிடினும் தன் சதையாடும்" என்றபடி மனதிற்குள்ளே இவையெல்லாம் நினைப்பான். "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்பது அவன் பாற் பொய்க்காது. முதலாவது, அவனுக்கு இவ்வுலகத்திற் தண்டனையுண்டு. கண்டுபிடித்தா லரசாங்கத்தாரது தண்டனை. அது தவறினும் தவறலாம். சர்வேசனாய், எங்கும் வியாபியாய், தானெனத்தகும், பரமனது தண்டனை தவறுமோ? அல்லது அவனைக்குற்றவாளியென்று பரமன் அறியானோ? நம்மனையர்க்கல்லவா கொலைபாதகன் குற்றமற்றவன்போற் காணப்படுவான். இறந்தவனைக்குறித்துப் பொய்த்துயருங் கொண்டாடுவான்.

சரி, இப்படிச் செய்வதில் எல்லாரையும் ஏமாற்றி விட்டோம் என்று நினைப்பான்.

"பொற்பூரும்
புண்ணியரைப்போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணிய ராவரோ புகல்"

ஆயிரந்தான் நினைத்தாலும் செய்தாலும் இவன் புண்ணிய பாபம் இவனைத்தொடராது விடுமோ? இத்த கையோனுக்கல்லவா "உரலுக்கு இடி ஓர்பக்கத்தில் மத்தளத்திற்கு இருபக்கத்திலும்" என்றபடி, இம்மையிலும் இடி, மறுமையிலும் இடி, உற்றுப்பார்த்தால் ஈரேழு ஜன்மமும் இடி. கொலைகாரன், (கொடிது! கொடிது!) தன்முகத்தை இருகைகளினுலும் மறைத்துக்கொண்டு ஆண்டவனை நால்வர் முன்னிலையிற்றொழுவான். நமக்கு அவன்தொழுவது போலத்தான் தோன்றும். அவனுக்கு அப்படியன்று. அவன் அன்று கொன்ற சரீரத்தினின்றும் நீங்கிய ஆவியானது, அவன் முதுகின் பின்புறமாகநின்று "அடே! துரோகி! நேற்றுத்தானே கொலை செய்தாய், பாபி! நீ ஆண்டவனைத் தொழப்பாத்திரனல்லன். பொய்வேஷம் போடாதே. நீ செய்தது ஒரு பிசகு. செய்ததை மறைக்கப்பார்ப்பது இரண்டாவது. உன்விஷயம், நீயாரைத்தொழுகின்றுயோ அவனுக்கு "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" விளங்கும். எழுந்திருந்துபோ" என்று சொல்லும். வெளியிற் சொல்லமுடியாமல் தவிப்பான். இனி இங்கிருந்தால், நமது முகக்குறியினுல் நம்மை யறிந்துவிடுவார்கள்

என நினைத்து வீட்டிற்குத்திரும்புவான். நிழலைப் போல அதுவும் வீட்டிற்குத்திரும்பும். இப்படியிருக்க அவன் கண்ணிற்குப்பட்டதெல்லாம் இரத்தமே. அவன் குடிக்க தண்ணீர் கொண்டுவந்து, இல்லாள் அவன்முன் வைப்பாள். அது அவனுக்கு அன்று அவன் கொன்ற இரத்தத்தினிறமாகவே காணப்படும். இவ்வாறுக பகற்பொழுதெல்லாம் கஷ்டப்பட்டு, மனந்தடுமாறி, இரவில் நித்திரையில் கவலையின்றித்தூங்கலாமென்று நினைத்து நித்ரையறையுட்புகுவான். அங்கே எரியும் விளக்கு இரத்தம் வீசுகின்றுற் போற்றேன்றும். அதை யணைத்துவிட்டுத்தான் செய்தவக்கிரமங்களை மனதில் நினைப்பான். தூக்கம்வராவிடினும் தானுகவே கண்ணைமூடிக்கொள்வான். கொஞ்சம் அயருவான். பிறகு உளரலும், பிதற்றுதலும் பிடுங்குதலுமே. "யாரங்கே குத்த வருவது. ஐயோ இரத்தம் ஓடுகின்றதே. வெட்டு கழுத்தை. மண்ணிற்புதை தண்ணீரிற்றள்ளு" என்று இறைந்து பதறுவான். இத்தோடு இன்னும் பலவுண்டு அப்பரமசண்டாளனுக்கு. மேலுலகத்துச் செல்வது ஒருவனது பாபமும் புண்ணியமுமன்ருே? இதுதான் கொலையின் காண்டல்.

கொலைக்குப் பலவிதகாரணங்களுண்டு. ஒருவன் மற்றவன் பொருளுக்குவேண்டிக் கொலைசெய்யலாம். அல்லது புகழுக்குவேண்டிக் கொலைசெய்யலாம். ஸ்த்ரீ ஜாதிவிஷயமாக எண்ணிலாப் பெயர்களைக் கொல்லலாம். தாயாதிப்பகைமையினுல் கொலையுண்டு. இவைகளிலெல்லாம், அதிக கொரேமானதும், மட்டான

தும் இல்லையா? உண்டு கொலைகளில் மாபாதகக்கொலைகள் இரண்டே. ஒன்று, தன் புத்ரிக்கு, அல்லது புத்ரனுக்கு வேண்டி, தான் ஆண் என்பதை மறந்து, குழந்தையை மடிமேல் வைத்துக்கொண்டு "ஆராரோ ஆரிரரோ" எனப்பலவிதமான தாலாட்டுகள் சொல்லி, தன்னலுவல்களை யெல்லாம் நிறுத்தி, சுகலாபமெல்லா மிழந்து, அதையே கண்ணுங் கருத்துமாய்க் கொண்டு, பார்த்துவந்து, பிள்ளைக்கு வயதுவந்தவுடன் "பிள்ளையாண்டான் நம்மைக்காப்பாற்றுவான். இனிப்பயமில்லை" என்று மனத்ருப்தியோடு இருந்து வருகிறான் தகப்பன். கடைசியாக, அப்பிள்ளை "இனி இக்கிழவனுக்கு என்ன வேலை சாகட்டும்" என்று நினைத்துக்கொன்று விடுகிறானே இந்தக்கொலை. மற்றொன்று இதனைத் தலை கீழாகக் கொள்ளுதல். அதாவது தகப்பன் தன் மகவைக் கொல்லுதல். இவர்களைத்தான் முறையே, "பிதாத்ரோகி" புத்ரித்ரோகி" என்று சொல்லுவது. இவர்களைத்தான் யாவரையுமஞ்சாத இயமனும் அஞ்சுவான். இவைகளை யெல்லாம் இங்கு சொல்லக்காரணம் இந்நாவலை முடிப்போரறிவார்.

அத்தியாயம் 2.

இளை தளிர் காலம். மலையின் உச்சியிலுள்ள பனி வெயிற் படுவதனால் உருகி மலை வீழருவிகளாகிக்கால் மைற் கப்பால் உள்ள வனத்துள் மறைகின்றன. அவ்வனத்தை ப்பூலோகஸ்வர்க்க மெனலாம்.

காலத்தினியல்பால் அவ்வனத்துள்ள மரங்கள் நேற்றுத் தான் சிருஷ்டிக் கப்பட்டன போல் தோன்றுகின்றன. ஈசனே தாவரசாஸ்த்ரியாகி, உலகத்தார்க்கு உள்ள மரங்களை யெல்லாம் காட்டும் பொருட்டு ஸகல மரங்கள், செடிகள், கொடிகள் இவைகளை அவ்வனத்துள் பயிராக்கி யிருக்கின்றார். தேக்கு, அரசு, ஆலை, ஓமை, பாலை, முதலிய பெரு மரங்கள் திக்காலுக் கொன்றாக நிற்கின்றன. நடுத்தரமான மரங்கள், பாரிஜாதம், பாதிரி, சண்பகம், கோவில்மந்தாரை முதலியன. ஒவ்வொரு மரங்களிலும் இலைகளிருப்பிடமே தெரியாது புஷ்பங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. வேளை காலை வேளையாதலால், சில புஷ்பங்கள் கீழே பாய் விரித்தாற் போற் பரந்து கிடக்கின்றன. சில மரங்கள் அவைகளின் நற் புத்ரர்களைச் சபேசன் பாதம் சேர்ப்பிக்கவேண்டி அவைகளைக் கொய் வாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. நந்தியாவர்த்திப் பூவைத் தோற் கடிக்கும் பாரி ஜாதத்தை முகர வேண்டிப் புஷ்ப மொன்று பறிக்கப் போனால் சபேசன் பாதம் அக்கணமே சேருவோ மென்பது நிச்சயம். ஏனெனில், அப்புஷ்பத்தின் நறுமணத்திற்காகக் காற்றைப் புசிக்கும் கட்செவியனினம் அளவிலாதன அம்மரத்தின் கீழ்க்கிடக்கின்றன.

நேத்ரா நந்தத்தை விளைக்கும் பலவிதச் செடிகள். சில செடிகளின் இலைகள் செம்பவளப் பச்சை நிறம். சில நற் சிவப்பு நிறம். சிலபனியிலும் வெண்மை நிறம். சில செடிகளின் இலைகளில் உள்ள

வர்ணப் பொட்டுகள் பச்சைப் பவுனில், வச்சிரம், வைடூர்யம் கோமேதகம் முதலிய நவரத்நங்கள் வைத்துஇழைக்கப் பெற்றிருந்தாற் போற்றோன்றின. இவைகளல்லாது, மல்லிகை முல்லை ரோஜா இன்னும் பல புஷ்பச் செடிகளுமுண்டு. அவற்றிலிருந்து கிளம்பும் வாஸனை, அப்புஷ்பங்களின் ஸாரத்தை ஒருங்கே சேர்த்து வைத்து, அதன் மேற் காற்றுப் படுவதினால் அக் காற்றோடு சேர்ந்து ஆகாயத்தை ஸுகந்தத்தால் நிரப்பு கின்றது. பலவிருட்சங்கள். மாமரங்கள், காய்களைத் தாங்க மாட்டாது தழைந்து கிடக்கின்றன. இதுவே சரியான சமயம் எனக்கொண்ட பச்சைத் திராட்சைக் கொடிகள், இம்மரங்களின் மேற்றாவி; தங்கள் குலைகளினால் மாங்காய்களை அவமானப் படுத்துகின்றன. எலுமிச்சம் பழங்கள் பெருநார்த்தம் பழத்தின் சீரைக்குலைக்கின்றன. வாழைகள், தங்கள் தார்களைத் தாங்கமாட்டாமல் இலைகள் அசைவதினால் உண்டாகும் காற்றினால் மளுக்கென்று முறிந்து விழுகின்றன. அவ்வாறு விழுதல் "மெல்லிய வாழைக்குத் தானீன்றகாய் கூற்றம்" என்பதைவிளக்கி, அங்கிருக்கும் பிராணிகளுக்குக் 'கூற்றமே இல்லிற்கிசைந்தொழுகா கப்பெண்' என்னும் நியாயத்தை அறிவித்து, "ஜாக்ரதை' பார்த்துப்பெண்களைக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகின்றன போற்றோன்றுகின்றன.

இங்ஙனமிருக்கச் "சொன்னதைச் சொல்லும் இயல்புடைய கிளிகள், பலவிடங்களிலும் திரிந்து வந்து மரங்களின் மேல் உட்கார்ந்து கொண்டு, "யா

ரடாவன்'' ''திருட்டுப் பையன்'' என்று பலவார்த்தை களைச் சொல்லுகின்றன. காடை, கௌதாரி, குயில் முதலிய பட்சிகள் தங்கள் சிறு குஞ்சுகளைத் தூங்க வைப்பதற் காகவோ, அல்லது வேறு எந்தக் காரண த்தினாலோ, மழலையுடன் பாடுகின்றன. அவை கள் பாடுவது, மானிடப் பெண்களை ஹேள னம் பண்ணுவது போலவும், அவ்வனத்திலே அச்ச மின்றித்திரியும், மான், கடம்பை, ஓரினம் முதலிய கான ஞானமுள்ள மிருகங்களை, சதஸாக நினைத்து க் கச்சேரி பண்ணுவது போலவும் தோன்றுகிறது. மிரளுமியல்புடைய மானினங்கள், அக்கான ஸாகர த்தில் மூழ்கியிருத்தலால், அவைகளை யணுகித் தட் டின போதிலும் அசையாமல் நிற்கின்றன. அவ்வ னத்திற்கு ஈசனே தோட்டக் காரனாதலால், தண் ணீர் கொட்டுவதற்காகத்தன் ஸேவகன் வருணனை யழைக்க அவன் கடல் நீரையுட் கொண்டு, கரேலெ ன்ற மேகத்தால் சூரியனை அவ்வனத்தில் நுழையாத படித்தடை செய்கிறான். ''காற்றுள்ளபோதே தூற் றிக் கொள்'' என்ற பழமொழியை அறிந்தன போல், மயிலினங்கள் சிறகுகளை விரித்தாடுகின்றன. தே வேந்த்ரன் ''ஊர்வசி ரம்பா முதலியவர்கள் இம்மாதிரி நடிப்பர்களா?'' எனத்திலோத்மையைக் கேட்க அ வள், ''ஐயோ இம்மயிலினங்கள் வேரோடு அழியா வா'' என்று ஈபாவ குணத்துடன் நினைக்கிறாள். யா வர்க்கு முன்னவன் மனம் வைத்தால் அவ்வனத்தி னழகைப் பற்றிச் செப்ப வேண்டுமோ!

அதன் நடுவில் பெரியதொரு தடாகம். இதை

ப் பரமசிவன்சடை முடி என்றே சொல்ல வேண்டும். அன்று அவன் கங்கையின் கர்வத்தை யடக்கினான். இதுவோ, பத்துக் கங்கைகளின் கர்வத்தை யொழிக்கின்றது. இதன் ஆழம் கண்டவரில்லை. எக்காலும் நீர் நிரைந் திருக்கும். தூரத்திலிருந்து பார்த்தால் தரையில் ஓர் வானம் போல் தோன்றும். ஸரஸ்வதியாள் வீற்றிருக்கும் இருபெரு தாமரை மலர்கள் சந்திர சூர்யர்களே. நீரோத் பலங்கள் அளவிலா நட்சத்திரங்களே. சிற்சிலசமயங்களில் ஆகாயத்தினின்று நட்சத்திரங்கள் விழுவதை நாம் பார்த்திருக்கிறோம். இத்தடாக வாகாயத்தினின்றோ, அடிக்கடி வீழ்வதைப் பார்க்கிறோம். "பலவான் தனவான்" என்ற செறுக்குக்கொண்டு, மடையான், கொக்கு, அன்னம் முதலிய நீர்வாழ் பட்சிகள் தமக்கு ஆகாரமாக்கிக் கொள்ள மீன்களைப் பிடிக்கின்றன. எவ்வாறேனும் தப்பித்துக் கொள்ள வேண்டி மீன்கள் தண்ணீர் மட்டம் விட்டெழும்பிக் கீழே விழுகின்றன. அவைகளின் உடம்பினது பளபளப்புத் தான், நட்சத்திரங்கள் வீழ்வன போல் தோன்றுவது. அக்குளத்தின் நாற் புறங்களிலுமுள்ள செடிகளில் இருக்கும் தேனடைகள் காற்றினால் அசைந்து இந்தத்தடாகத்தில் விழுகின்றன. அதனால் அதனீரெலாம் தேனே. அந்நீரை யருந்தும் பிராணிகள் மது மயக்கத்தால் ஆடுவது அளவிலாச் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆம்பல் உறங்கக் கண்ட வந்தணர்கள், ஆம்பல் குவிந்தும், தங்களது ஜபதபாதிகள் இன்னமும் முடியாது மார்பிற்றிரு நூலும், உருத்திராட்சமாலையும் வி

ளங்கப் பெற்றுத் தம்மனதை அப்பனிடம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். அதை நோக்கியே தான் இதைத்தபோவனம் என்கிறேன்.

கருமந்தவறாது, நடு நிலைமை யோடு, பொய் குறளை வன் சொல் முதலியன வொழித்து "எல்லாம் ஈசன் செயல்" என விருப்பார் வசிக்கும் இடம் முதுகாடாயினும் அது முக்திவீடாகு மன்றோ? இந்தத்தபோவனம் ஜாதபுரத்தையாளும், ஸாங்க மகாராசனுடையது. அளவிலாக்கோபுரங்கள் அதோ தெரிகின்றனவே அது தான் ஜாதபுரம்.

அத்தியாயம் 3.

இப்பட்டணத்தில் சற்றேறக்குறைய மூவாயிரம் வீடுகள் உண்டு. கருப்பே கண்டறியாது. ஸாங்கன் தானதனுக்கிடையூறு, தன்னால், தன் பரிசனத்தால், ஊன மிகு பகைத்திறத்தால், கள்வரால், மற்றய வுயிர்தம்மால் உண்டாகக் கூடிய பயங்களை யெல்லாம் வேரறக்களைந்து, ஆறிலொருதிறை கொண்டு, மன்னுயிரைத்தன்னுயிராகப் பாவித்து நீதி முறை பிறழாது செங்கோல் செலுத்தி வந்தான். ஈசனொருவன் பாதந்தவிற, மற்றய பாதங்களைச் சனங்கள் பணிய வேண்டிய காரணமே கிடையாது. "பொறை யொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற் கிறை யொருங்கு நேர்வது நாடு." என்றபடியே, அவன் குடிகள் அரச

னைத் தெய்வமெனக் கொண்டாடி அவன் முக ங்கோணுது நடந்துவந்தார்கள். "ராஜோப சா ராம் சமர்ப்பயாமி" என்றுசொல்லித்தான் பி றகு சடங்குகளை யாரம்பிப்பார்கள். கோவில் களில் வேளைதவறுமல் பூசை நடந்து வந்தது. அந் தணர்கள் செய்வன திருந்தச் செய்தனர். ஜாதிமத பேதமின்றி யாவரும் தத்தம் தெய்வங்களைத் தொ ழுது வந்தனர். மாதம் மும்மாரியுண்டு. கதிர்கள் தாங்காமல், நெல், கோதுமை முதலிய பயிர்கள் தலை சாய்ந்திருக்கும். நற்ரு மரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் சேர்ந்தார்கள் சாங் கனும் சுந்தர குமாரியும். இவள் கொண்டவளுக் குக் கொழுநனே தெய்வம் என்னும் கருத்துடை யள்.

"ஏலாத இடுக்கணிலும்
மேலாத குணத்தினள் தன்
தோலாத அரணுவாள்
நாயகன்ருன் கை விடினும்
பேயென்னக் கடு கடுத்து
தூய மனஞ் சினங் கொள்ளாள்."

இத்தகைய காதலியும் காதலனும் மாறின்றி நீதில் கருமஞ் செய்து வந்தார்கள். பூனையும் எலி யும் ஒரே தட்டில் எதிருமெதிராய் உட்காந்து தின் னும். கீரியும் பாம்பும் விளையாடும். இம்மாதிரியாகப் பகைமையே யில்லாத நாட்டில் பெருங் குறையொ ன்றிருந்தது. அரசனுக்கு வயதாகியும் புத்ரஸந்தா னம் கிடையாது. அதைப் பற்றி அரசன் வருந்து

வானிலன். ஆயினும், ஒருநாள் கொலு வீவிருந்த காலத்து, ப்ரபல வித்வான் ஒருவன், பல சாஸ்திரங் களையு மெடுத்துரைத்துக் கடைசியாக, புத்ரனில் லாதவன் "புத்" என்னும் மாபாதக நரகம் அடை வான் என்றனன். அரசன் இதை இலட்சியம் பண் ணாத வனுயினும், மூத்தோர் சொல் வார்த்தை யமிர்த மெனக் கொண்டவனுதலால் அவன் ம னம் சற்றுத்தடுமாறியது. இவ்வாறிருக்கத் தீயில் நெய் வார்த்தாற் போல, வீணை வித்வான் பாடிய ஒவ்வொரு இராகமும், அரசனை மெய் மறக்கச் செய் தது மன்னியில் வாய்விட்டு "சபாஷ்! மிகவும் நன்ரு யிருக்கிறது" என்று சொன்னவுடன் அஹஸ்யன் எழுந்திருந்து

"யாழினிது குழலினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்."

என்றான். இதைக் கேட்டவரசன் "ஆகா, ஊரெல் லாம் என்னைப் பாவி என்றல்லவோ சொல்லு வார்க கள், ஈசனருளன்றோ" எனப்பலவாருக நினைத்து ம ன முருகுவானுயினன். சபையுங் கலைந்தது. பர் த்தா முகங்கோணி யிருத்தலைக் கண்ட, சுந்திரகுமா ரி, தங்களுக்கு யாது குறை. இன்று ஏதோ முகம் வாடியிருக்கின்றதே யென, ஸாங்கன் நடந்தவற்றை ச்சவிஸ்தாரமாகச் சொன்னர். அடியார்கள் மனதைச் சோதிக்கும் முக்கண்ணன் மனங் கூர்ந்து, இவர்களை "புத்" என்னும் நரகத்தைக் கடக்க ஆசீர்வதித்த னன். சுந்திர குமாரி கருவடைந்தாள். திங்கள்

பத்தாயின பின் ஆண் மகவு பெற்றாள். பிள்ளைபிற ந்தானெனக் கேட்ட ஸாங்கன், ஆநந்த பரவசனாகி ச்சபேசனை நினைத்து ஆநந்த பாஷ்பம் சொறிந்தான். இது முதல் சாங்கன், இப்பிள்ளையையே தெய்வ மாகக் கொண்டாடினன். ஐயனை, மறந்தான். அவ ரும் அடியனைத் துறந்தார். இவ்வாறிருக்க, பிள்ளை க்குப் புண்ணியாவசனம் முதலியன செய்வித்து, அந் தணர்க்குத்தானம் வழங்கினன். அது பெற்ற அந் தணரும் சந்தோஷமாக வீட்டிற்குத் திரும்பினர். ஜாதி, மத, பேதமின்றி உற்றார்க்கு அன்னதானம் வழங்கினன் ஸாங்கன். சிற்றரசர்களும், இவனை யொ த்தவர்களும், வந்து விருந்துண்டு களிப்புடனே செ ன்றார்கள். இவைகள் முடிந்தன. சகல வின்பங்களோ டும், ஸாங்கன், சுந்தரகுமாரி, ராஜகுமாரன் இம்மூவ ரும் இருந்து வந்தனர். இவ்விராஜ குமாரன் பெயர் விசாங்கன். இவனுக்கு வபது ஐந்தாயிற்று. சாங் கன் வயோதிகத்தால் இறந்தான். அக்காலத்தில் "சககமனம்" என்றதோர் வழக்க முண்டு. அதா வது புருஷனிறந்தால், மனைவியாவாள் தானும் உட னே மறு ஜதை யடுக்கி யுயிர்விடுதல். [கொடுமை! நல்ல மரத்திற் பில்லுளி பாய்ந்தது போல, இந்தி யாவில் இந்த வழக்கம் எதற்கு? இப்போது அந்த வழக்கம் அடியோடே நின்று விட்டது. அதனல் உண்டாகும் பெருமை நமது கவர்ன்மென்டாரைச் சேர்ந்ததன்றோ?] அவ்வாறே சுந்திரகுமாரியும் தன் புருஷனைத் தொடர்ந்தனள். விசாங்கன், சிறுபிராய ஸ்தனானதால், ராஜ்ய பாரம் வஹிக்க ஆற்றல் கிடை யாது, என வறிந்த சாங்கன், தான்சாகு முன்னமே,

கங்கபட்டர் என்னு மந்தனனை, விசாங்கன் ஆளாகும்வரை ராஜ்யத்தை நடத்தி வரும்படி ஏற்படுத்தியிருந்தார்.

அத்தியாயம் 4.

கங்கபட்டர் விசாங்கனை நல்வழியிற் செலுத்த வேண்டி அவனுடன் நல்ல பிள்ளைகளைச் சேர்த்து வைத்து, அவனுக்குப் பண்டிதர் பலரை ஏற்படுத்தித் தன்மகனை போற் பாவித்து வந்தார். அவர் எவ்வளவு சிரமப்பட்டும் ராஜகுமாரன் முன்னிற்கு வந்த பாடில்லை. அவனோ இப்போது வயது வந்தவன். வயது இருபது. குழந்தை முதல் எவ்வளவு சிரமப்பட்டும்

"விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு."

என்றபடி, அவனுக்கு அறிவேதோன்றவில்லை. கோபத்திற்கு இருப்பிடம். பழிபாவங்களுக் கஞ்சான். அரசர்க்குரிய ஆண்மையே கிடையாது. அவனது ஸ்நேஹர்களோ ஒன்றிற்கு முதவாதவர்கள். மூத்தோர்வார்த்தை யவனுக்கு நஞ்சு. சோம்பித்திரிதல் அவனது உடன்பிறந்தது. எடுத்ததெல்லாம் பொய். தான் அரசகுமாரன் என்றமமதை யதிகம். தன்தகப்பனிருந்தகாலத்தில் யார் யார் அவரது ஜன்ம சத்ருவோ அவர்களெல்லாரும் இப்போது பந்து மித்ரர்

கள். இதெல்லா மறிந்து கங்கபட்டர், "விசாங் கா,

"நட்புப்பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாவரையுமையுறுதல்—தக்கார்
நெடு மொழி கோறல் குணம் பிறிதாதல்
கெடுவது காட்டுங் குறி

என்று சொல்லப் பட்டிருக்கிறது. நீ செய்வதெல்லாம் வேண்டாம். விட்டு விடு." என்று சொன்னார். உடனே விசாங்கன் "கங்கப்பட்டரே! என்ன சொல்லுகிறீர். நான் இத்தனை நாளாக நீர் செய்தவைகளைப் பொறுத்து வந்தேன். உமக்குத் தான் தெரியுமோ இந்தப்பாட் டெல்லாம். அப்போர்க்கொத்த நளன் சூதாடவில்லையா? அது மட்டில் சரியா? உமக்கு அந்தப் பாட்டுத் தெரியாதோ! என்னைப் பட்டத்தினின்றும் துரத்தி விட்டு, உமது பிள்ளைக்குக் கட்டவா இதெல்லாஞ்சொல்லுகிறீர். என் தகப்பனார் இறந்த பிறகு நான் அரசன் என்பதை மறந்தீரோ" என்று வாய்க்கு வந்த படியாகப் பிதற்றினான்.

திங்கள் மறுத்தாங்கும்; சான்றோரது தாங்கார் என்றபடியே இவ்வார்த்தைகள் அவர் மனதில், புண்ணில் ஈட்டி பாய்வது போல், பாய்ந்தன. ஆயினும் "சிறியோர் சிறுபிழை செய்தனராயின் பெரியோரப் பிழை பொறுத்தல் கடனே" என்பதையுள்ளத்திற் நினைத்து, அவன் செய்த பிழைகளையெல்

லாம் சிறுபிழை யாகக் கொண்டனர். கொண்டு, "ஐயோ, நாம் சொல்லுவதெல்லாம் நம்மிறைவனு க்குக் கெடுதலாகப் படுகின்றதே. மந்திரிக்கழகு அரசனைத்திருத்துவதன்றோ? நம்மதெல்லாம் விழ லுக்கிறைத்த நீராகின்றதே. நம்மையல்லவோ உல கம் தூற்றும். லாங்கனும் நானும் அரிச்சந்த்ரனும் சத்யகீர்த்தியுமாக இருந்தோமே? வேண்டாம், காட்டையடைவோம் என்றால், நாடுபாழாமே" என இம்மாதிரி நினைத்து உருகி, உடல்வாடி, அங்கம் மெலிந்து, ஊரெல்லாம் அழ, வுயிர்துறந்தார் கங்க பட்டர். உத்தமனிறக்கவே, விசாங்கன் தன்குடிக ளால் முடி சூட்டப்பெற்றான். அக்காளும் நுழைந் தாள் பட்டணத்துள். இனி விசாங்கனை யண்டுவா ரடக்குவாரில்லை. இவனிட்டதேசட்டம். இவனது சுவய பால்யச் சிநேகர்கள் இவனைச் சூழ்ந்து கொண் டனர். அவர்களுள் ஒருவன் கொலைக்குப்பாபமி ல்லையென்பான். மற்றொருவன் பொய் சொன்னவனு க்குக்குறைவே கிடையாது என்பான். மற்றொருவன் பெரியோர் வாக்கெல்லாம் பொய்யென்பான். இப் படியாகத் தந்தையாட்டந்தலைக்கு மேலாக விருந் தது. அநீதி யதிகரித்தது. உத்தமர்கள் வீடுதுற ந்து காட்டிலிறந்தனர். ஏனெனில் "கொடுங்கோன் மன்னன் வாழு நாட்டிற் கடும்புலி வாழுங்காடு நன் றே" என்பது சரியல்லவா? ஜாதபபுரத்தில் வீடு களநேகம் பாழாயின. "அரசும் இல்வாழ்வானில் வழியில்" என்றபடி இவன் இனி யரசனுவனு? கங்க பட்டர் ஆண்டவாளுகை, ப்பகையரசர்களைக் கிட்ட வணுக வொட்டாமல் செய்தது. அவர்

"கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல்
பைங்கூழ்களைக் கட்டதனோடு நேர்."

என்பதையறிந்து, துஷ்டர் முதலியவர்களைச்சேர்ப் பதேயில்லை. இப்போது எல்லாம் மாறிவிட்டது. ஊரெல்லாம் வம்பர்களும் வீணர்களும் நிறைந்தனர். பிராம்மணர்கள் ஒரே குடி. அதற்குக் காரணம் நம முன்னோர்கள் சோமரஸம் குடித்தார்களே! என்பார்கள். திருட்டுப்புறட்டே கிடையாது. ஏனெனில் ஒருவரை யொருவர் தோற்கமாட்டார். மழை பெய்து வருடம் ஒன்றாகிவிட்டது. மழையே காணோம்.

இஃதிங்ஙனமிருக்க விசாங்கனுக்குக் கலியாணத்தைப்பற்றி யோசிக்கத் தொடங்கினார்கள். இத்தகைய குணமுள்ளவனுக்கு யார்தான் பெண் கொடுப்பார்கள்! ஆயினும் அரசனானதால், ஹம்சபுரம் அரசனது பெண்ணைக் கொடுப்பதாகப் பேசி முகூர்த்தத்தையும் வைத்துவிட்டார்கள். ஹம்சபுரத்தரசன் பெயர் ப்ரதாபசிங்கன். அவ்வாறே கலியாணம் நடந்தேறியது. அப்பெண்ணின் பெயர் லட்சுமிகுமாரி. போன ஜன்மாந்திரத்திய தீவினையால் விசாங்கனைக் கணவனெனக் கொண்டவள். மாமியைக் கொண்டவள் குணங்களில். "குடியனோ வெறியனோ" என்றபடி விசாங்கன் அவளைப் படுத்தும் பாடு கணக்கு வழக்குக் கிடையாது. இவன் யாது செய்யினும் "நீ கொண்டாளாயாகினு முன் குறைகழலே கூறுவனே" என்று

அவன் பாதமே சரணமெனக் கொண்டனள். ஆயி னும், இவன் படுத்தும் பாடுதாங்காமல் கண்ணீர் சொ ரிவள். இக்கண்ணீர் எதை விளக்குகின்றது? "அன்று அவள் அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க் கும்படை" என்றது, திரௌபதையினதினும், இவளை து உண்மைப்படுத்துகின்றது. இவ்வாறு கஷ்ட நஷ்டங்களுக்கிரையாகி யிருந்து வருநாளில், கருப் பவதியாகி, ஓர் பெண் மகவு பெற்றனள். இவள் பெ யர்தான்கிருஷ்ணகுமாரி. லட்சுமிகுமாரி குழந்தை யையறையில் விட்டு, ஜன்னி கண்டிறந்தாள். இதை யறிந்த ப்ரதாபசிங்கு, தன் பெண்ணின் மகள் கிரு ஷ்ணகுமாரியைத் தன்னூர்க் கெடுத்துச் சென்றான். விசாங்கனே மறுவிவாகம் செய்து கொண்டு, அவ ளே தெய்வமன மதித்து வந்தான், "ஆங்காரியந்தடு த்த அங்கனை சொற் கேட்டிறந்தான் தூங்காத்தசர தன்" என்றபடி, அவள் வார்த்தைகளைக் கேட்டு ஒவ் வோரூராக விற்றுக் கடைசியாக இரண்டு அல்லது மூன்றே கிராமங்கள் தங்கின. இது தான்அளவு க்கு மிஞ்சுபவனும், அளவுக்கு குறைந்தவனும் படும் பாடு. இத்தகையான் எப்போது படுவான் பாடு? "கெடும் போழ்தில் கண்டனவுங்காணுக் கெடும்" என் றபடியே எல்லாம் ஒருங்கே யொழியும்.

அத்தியாயம் 5.

கிருஷ்ணகுமாரியை, அவள் பிறந்து தாய் இறந்தவுடனே பாட்டனாகிய ப்ரதாபஸிங்கு, தன்னூர்க்கு அழைத்துக் கொண்டு போய் அக்குழந்தையை தன் னிறந்த பெண்ணின் உருவென மதித்து க்கண்ணை க்காக்கும் இமைபோல க்காத்து வந்தார். இவ்வாறாக வருஷங்கள் பதினைந்து ஆயின. இப்பொழுது பதினாறு வயதுடைய பக்குவப்பெண் ணாயினள். பெண்களுக்கு ப்புஷ்பவதி ஆவதற்கு முன் ஓர் மாதிரி உடம்பு; ஆனபின் ஓர் மாதிரி உடம்பு. அதிலும் இவளோ செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வத்திலே நடமாடுகின்றவள். இவளை எப்படி யென்று பார்ப்போம்.

நாள் ஏற ஏற அவள் மேனியும் சுக்கில பட்சத்துச் சந்திரன் போல் ஏறியே வந்தது. வயது ஏழு முதல் பதினாறு வரையில் சகல சாஸ்திரங்களையும் கற்று, ச்சரஸ்வதி யெனத் தகுந்தவளாயிருந்தாள். ஆயினும் சரஸ்வதியே என்றனர் சிலர். இவள் கறுங் கூந்தலையும் அதற்கு இயற்கை வாசனையாகியச் சண்பக மணத்தையும் கண்டு நக்கீரனுக்குக் குஷ்டம் உண்டாக்க க்காரணமாயிருந்தவள் இவளே என்பர் சிலர். அவள் காதளவு ஓடிய கரு விழிகளைப் பார்த்து நேற்றுத்தானே மதுரைக் கோயிலுக்குள் பார்த்தோம் என்பர் சிலர். அவள் குரலைக் கேட்

போரில் சிலர் இவள் குயில் தான், மானிடவுருவு கொண்டுளள் என்பார். அவள் நடையைக்கண்ட சிலர் இவள் அன்னபட்சியை அவமானப் படுத்த நமது அரசன் ப்ரதாபஸிங்குக்குப்பேத்தியாய்ப்பிறந்தனள் என்பர். சிலர், இரதிமதன் இருவருக்கும் தங்குதற்குரிய இரு பெரு எழின் மணிக்கூடாரங்கள் அவள் அமைக்கப்பெற்றிருக்கிருள், என்பர். மற்றுஞ் சிலர் இவள் பூர்ணயுசுடன் இருக்க வேண்டும் என்பர். இம்மாதிரியாக கண்டோர் கலங்கினர்.

ஆயினும், கிருஷ்ணகுமாரிக்குக் காமமெனுமலைகளைத்தணிக்கக் காதலெனும் சந்திரனின்மையால், அவ்வலைகள் அவளைக் குலுக்கிச்சீரழித்துச் செம்பவழ உதடுகளை வெண்மலராக்கி, அவள் முதத்தை வாட்டின. இதெல்லாம் மணப்பருவத்தின் அடையாள மெனவறிந்த ப்ரதாபஸிங்கு தன் பேத்திக்கு மணம் புரிவிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டார். [அக்காலத்தில் இக்காலத்தை போலக் கன்னியர்களைக் குழந்தைப் பருவத்திலேயே மணம் செய் விப்பதில்லை. அவர்கள் தக்க கணவர்களை நாடித்தாமே வரிப்பது வழக்கம்.] அவளது சோதி ப்ரகாசமும் சௌந்தர்ய சொரூபமும் பலரைத் தூண்டின. இவ்விஷயத்தைக் கிருஷ்ணகுமாரியினிடம் தெரிவிக்கவேண்டி, தானே சொன்னல் பெண்களுக்குறிய பேதமைக் குணத்துடன் நாணுவள் என நினைத்து, அவளது சேடியருள் ஒருத்தியாகிய கமலா என்பாளிடம் இச்சமாசாரத்தை யறிவித்து, அவள் பதிலை அறியும்படி சொன்னன். அவள் தனது

சகாக்களில் மூவரைக் கூவி ஒருவரொருவரிடத்தி லும் இம்மாதிரியாகச் சொல்லெனச் சொல்லி விட்டு, மத்தியான போசனம் ஆன பிறகு, தனது எசமானி கிருஷ்ணகுமாரியையும் அம்மூன்று சேடியரையும் அழைத்துக்கொண்டு அருகேயுள்ள சிங்காரவனத்தி ற்குப்போயினள். அங்கேபோய் ஒரு மண்டபத்துள் உட்கார்ந்து, சொக்கட்டான் சோழி முதலிய காலப் போக்கு விளையாட்டுகளில் அமர்ந்தனர். சூரியன் தனது அவ்வளவு கொடுமையில்லாத கிரணங்களை வீசுகிறன். அப்பொழுது அங்குள்ள தடாகத்தில் அவர்கள் ஒருங்கே சேர்ந்து சலக்கிரீடையாடித் தலைப் பின்னல் போட்டுக்கொண்டு புகைகமிழ் தாமும் சூட்டி, பூண்பன இசையப்பூட்டி, செந்துஹில் உழு சேர்த்தி சிறு திண்டி தின்று, தாம்பூலம் தரித்து, உல்லாசமாய் ஓடியாடுவதை ப்பார்த்தால், உல கப்பற்றிழந்த தவசிகள் ஆண்மையும் தேயும்.

கிருஷ்ணகுமாரி தனக்குள்ள மதமயக்கத்தால் சேடியர்களெல்லாம் அங்குமிங்கும் ஓடும்பொ ழுது, தான் ஓடமாட்டாமல் நிற்பள். அப்பொழுது அவள் முகம் அன்றலர்ந்த தாமரையாயினும் சிறிது பொறாமையால் வாடியிருக்கும். இவள் தனியாய் நிற்கும்பொழுது அங்கே திரியும் அன்ன பட்சிகள் தன் அரச பட்சி இதோ நிற்கிறதென நினைத்து க்கிட்டவரும். பெண்ணென அறிந்து வெட்கி "நாம் இவ்வளவு தானு அழகு; நம் அரசபட்சிதான் எற் றே இவளுக்கு" என்று சொல்லி மிகுந்த அவமானத் தை யடையும். அங்கிருக்கும் வண்டுகள், இவள்

கரிய விழிகளைத்தம் பேடை யென மதித்து மருவ வரும். இப்படியாக இவள் நிற்கையில் சூரியன் அஸ் தமிக்கிறான். கமலா யென்பாள் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டித் தன் பின்னால் நிற் கும்கிருஷ்ணகுமாரியை க்காணாதவள் போல நடித்து அவளும் மற்றைய சேடியர்களும் அடியிற் கண்ட வாறு பேசத் தொடங்கினார்கள்.

கமலா:—ஏனடி ! மரகதம் நீ மணம் புரிந்து கொள்ளப் போகிறாயோ, இல்லையோ ? [என்று சொல்லி விட்டு உதட்டை அசக்கினாள்.]

மரகதம்:—ஆம். நான் பண்ணிக் கொள்ளப் போகிறேன்.

அம்புசாட்சி:—ஏனடி கமலா? மரகதத்தை மட்டில் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறாயா என்று கேட்டாயே? என்னை யேன் கேட்க வில்லை? இருக்கட்டும், எனக்கும் தெரியும்?

கமலா:—உனக்கு நேற்றைக்கே வரன் பிடித்து விட்டேன். நீ துளசிங்க புரத்துப் பத்மாவதி மூத்த குமாரன் தனபாலனைக் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

மரகதம்:—கமலா ! எனக்கும் அம்மாதிரி செய் திருக்கக் கூடாதா?

கமலா:—போடி அசடு! அம்புசாட்சி வந்து என்னை அடிக்கடி வலுவிலேயே கேட்டாள். அவளு

க்குத் தான் கலியாணத்தின் சுகம்தெரியும். ஆதலால் உடனே தீர்மானித்து விட்டேன்.

மரகதம்:—கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? அல்லது வாழைப்பழம் வேண்டா மென்கிற குரங் குண்டா? உலகத்திலே பெண் என்றால், அதுவும் என் னைப் போலொத்தவர்களுக்கு, ஒரு காதலன் வேண் டாமா? த்ரௌபதி ஐந்து பேர்களைக் கலியாணம் பண்ணிக் கொள்ள வில்லையா? தாரை ப்ரஹஸ்பதி யிருக்க சந்திரனைக் கூடவில்லையா? அவர்களோ பஞ் சகன்னிகைகளில் இருவர்களல்லவா? எனக்கு ஒருவ னுவது வேண்டாமா? நானும் கிஷ்ணகுமாரி பாயி யைப்போல, கலியாண மென்றால் பயப்படுகிறேனா? என்று இவ்வாறு சொன்னவுடனே கிருஷ்ணகுமாரி க்கு மனந்தாங்காமல் கமலாளிடம் வந்து, "என்னை ஏன் இம்மாதிரியாக மரகதம் சொன்னாள்." என்று கண்ணுங் கண்ணீருமாய்ப் பேச முடியாமல் பேசி னாள். அதற்கு,

கமலா:—அம்மா உங்களுக்கு அவள் சொன்ன தில் கோபமா? அவள் சொன்னதெல்லாங்கூடி நீங்கள் பயப்படுகிறதாக. நீங்களோ கலியாணம் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே கண்ணீர் சொ ரிகிறீர்கள்! அவள் சொன்னது, நீங்கள் செய்கிறதில் நூற்றில் ஒரு பாகங்கூட இல்லையே!!

கிருஷ்ணகுமாரி:—[வெட்கத்தால் தலைகுனிந்து தன் புடவையின் ஓர் தலைப்பைக் கடித்துக்கொண்டு

மற்ருெரு தலைப்பிஞல் தன் முகத்தை மறைத்துக் கொண்டு மழலையுடன் கூடிய குயில் தொனிபோல] ஆம். நான் அழுகிறேஞ? [கண்ணைத் துடைத்துக்கொண்டு தலைப்பை சாதாரணமாக விட்டு விட்டு] எல்லாருக்கும் சொன்னற்போல என்னிடத்திலும் சொன்ஞல் நான் கேட்கமாட்டேஞ? அன்று நீ பணம் வேண்டுமென்ற பொழுது நான் என் பாட்டனிடத்திற் போய் எனக்கு வேண்டுமென்று சொல்லி வாங்கி உனக்கு கொடுக்கவில்லையா?

கமலா:—[மரகதத்தைக் கூப்பிட்டுச் சைகை காண்பித்து விட்டு] நீ அம்மாவை என்ன சொன்ஞய்? உனக்கு முன்னதாகவே அம்மா கலியாணப் பண்ணிக் கொள்ளப் போகிருர் பார்!! என்று சொல்லி மற்றைய சேடியர்களுடன் மரகதத்தையும் வீட்டிற்கு ப்போகும்படி அனுப்பி த்தானும் தன் எசமானி கிருஷ்ணகுமாரியுமாகப்பின்ஞல் மெதுவாக ப்பேசிக்கொண்டே சென்ருர்கள்.

கமலா:—அம்மா நீங்கள் சொன்னது வாஸ்தவம் தாஞ?

கிருஷ்ணகுமாரி:—நிச்சயம்.

கமலா:—ஆயின், தங்கள் பாட்டனிடம் சொல்லட்டுமா?

கிருஷ்ணகுமாரி:—சொல்லு, ஆஞல் நான் சொல்லச்சொன்னதாக சொல்லாதே. நீயே என்னிடத்

தில் சொன்னதாகவும், நான் என்பாட்டன் சொல்லுகிறபடி கேட்கிறேன் என்று சொன்னதாகவும் சொல்லு, என்று இவர்கள் பேசிக்கொண்டபின்பு தன் எண்ணம் நிறைவேறிய கமலா "அப்படியே செய்துவிடுகிறேன் அம்மா" என்று சொல்லி வீடு சேர்ந்தார்கள்.

இரவில் போசனமான பின்பு கிருஷ்ண குமாரியின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ப்ரதாபசிங்கினிடம் சென்று கமலாவானவள் நடந்ததையெல்லாம் ஸவிஸ்தாரமாகச் சொன்னாள். இதைக்கேட்ட ப்ரதாபசிங்கு, அளவிலாச் சந்தோஷமடைந்து எப்பொழுது பொழுது விடியுமோ என்று மிகுந்த ஆவலுடன் இருந்தான்.

அத்தியாயம் 6.

ப்ரதாபசிங்குக்கு அவ்விரவு யுகம் ஒன்று போலக்கழிந்தது. கதிரவன் தன் முகத்தை யாது காரணத்தினாலோ கழுவா வண்ணம் மங்கலோடு காட்டினான். அதன் காரணம் அவனுக்கு த்தான் தெரியும்! ஐயோ! அது ப்ரதாபசிங்குக்கு த்தெரியக் கூடாதா? விதிவழியே தானே மதியும் செல்லும். அவன் ஊர் விட்டு ப்புறப்படும் போது தேவர்கள் தண் மாரி பொழிந்தனர். இப்போதாவது அறியக் கூடாதா? "தும்பலில் கிளம்பினாலும் தூற்றலிற் கிளம்பக் கூடாது" என்று பெரியோர்வாக்குண்டே. "கேடு வரும்

பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பது உண்மையாகவே முடிந்ததே!! ஆயினும், அவன் கொண்ட ஆசையால் இக்கருமத்தையே கண்ணெனக்கொண்டு தடைகளெல்லாவற்றையும் வென்று எப்படியாவது கிருஷ்ணகுமாரிக்கு மணம் முடித்து விடவேண்டுமென்ற பிடிவாதத்துடன் வாகன மூர்ந்து ஜாதபபுரம் நோக்கிச் சென்றான்.

வழியில் நேர்ந்த சகுனங்களை அவன் கவனித்திலன். மாமன் வருகையைக் கேள்வியுற்ற விசாங்கன் அவரை எதிர்கொண்டு அழைத்துவரச்சென்று அழைத்து வந்து, ஆசனமிட்டு அமர்த்தி மனம் குளிரக்குடும்ப யோகட்சேமங்களை விசாரித்தான். "பச்சிங்கி குளிர்ந்தும் கொலும்" என்பதையறியாத ப்ரதாபசிங்கு, தன் மருமகன் திருந்தி விட்டான் என்ற சந்தோஷத்தினால் தன் இறந்த பெண் உயிர்த்தனளெனக் கொண்டான். விளக்கு அணையும் போது ஓங்கி எரிந்து உடனே அணைதல்போல இது தான் விசாங்கன் தான் பிறந்தது முதல் நாளது வரையில் மரியாதையுடன் இருந்த தடவை. பதுங்கு புலியை நம்பலாமா? ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? தொட்டில் பழக்கம் சுடு காடு மட்டில் அன்றோ! மெய்யறியா விசாங்கனை நம்பலாமா? இவ்வளவு கேடும் கிருஷ்ணகுமாரியை அல்லவோ அடைகின்றது! மருமகனும் மாமனும் சிறிது நேரம் பேசியிருந்து பிறகு ஸ்நானம் முடித்து, உண்டு, கலவைச் சாந்தணிந்து பணிவிடைக்காரர்கள் சாமரம் வீச, மருமகன் ஓர் சோபாவிலும் மாமன் ஓர் சோபா

விலும் உட்கார்ந்து கொண்டு ஊர் விஷயங்களைப்ப ற்றி ப்பேசி ப்பின்பு, கிருஷ்ணகுமாரியின் கலியாண விஷயத்தை ப்பற்றி ப்பேசலானார்கள்.

பேசிக்கொண்டிருக்கையில் அரண்மனை வாயிற் கார்ப்போன் வேகமாக ஓடிவந்து தலைகுனிந்து அட க்கவொடுக்கத்துடன் "மகராஜ்! குந்தளபுரத்து இள வரசு சுகுணசிங்கு மஹாராஜா வருகிறார்கள். இந் தனைநேரம் கோட்டை வாயிலில் வந்திருப்பார்கள்." என்று சொனனான். உடனே எழுந்து சென்று அவ ரை அழைத்துவந்து, தன் பக்கத்துள்ள ஆசனத் தில் அமர்த்தி, அவருக்கு ச்செய்யவேண்டிய மரியா தைகளைச் செய்தான். பிறகு விசாங்கன், சுகுண சிங்கு இன்னாரென்றும் அவனை ப்பற்றிய மற்றைய விஷயங்களையும் தன் மாமனுருக்கு வெளியிட்டான். "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து வழி மறிக்கின்றதே! இதல்லவோ என் அதிர்ஷ்டம. கிரு ஷ்ணகுமாரியின் அதிர்ஷ்டம் இதிலேயே தெரிகின் றதே! நல்லது!" என்று மனதில் நினைத்து தன் னுள் தான் மெய்மறந்தான்.

இஃது இவ்வாறிருக்க இப்பொழுதுவந்த விரு ந்தாளியாகிய சுகுணசிங்கைப்பற்றிச் சொல்லுவோம். இவன் குந்தள தேசத்து ராஜனது ஏக புத்ரன். இவ னுக்கு இப்போது வயது இருபத்திரெண்டு. சற்றேற க்குறைய ஆறடி உயரமுள்ள ஆஜானபாகு. உயரத் திற்கு த்தகுந்த பருமனுடையவன். தலையில் கட் டுமயிருடனும் அகன்ற நெற்றியில் அட்சதை ப்பொ

ட்டும், திண்டோளும் பரந்த மார்பும், உடையனா னென்றே சொல்லலாம். சகல சாஸ்திர நிபுணன். எக்காலும் புன்னகை முகமுடையோன். "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்று அறிந்து, அஞ்சுவது அஞ்சலாகிய அறிவோர் தொழிலைக் கைக்கொண்டவன். பெரியோர்பால் அடக்க வொடுக்கமும் பெருமையிற் சிறுமையும் தாழ்விலுயர்வும் கொண்டவன். இவனுக்கு அக்காலத்து வழக்கப் பிரகாரம் மணப் பருவமானபடியினால் கிருகஸ்தனாக்கக் கருதினார். அவன் பெற்றோர். சீரும் சிறப்பும் வாய்ந்த குந்தள தேசத்து ராஜகுமாரனுக்குப் பெண்கள்தானா கிடைக்காது!! பல தேசத்து ராஜாக்கள் "நான் தருகிறேன்; நான் தருகிறேன்" என்று காத்திருந்தனர். ஆயினும் "நாம் ஒன்று நினைக்க ஈசன் ஒன்று நினைக்க" அவர் நினைப்பெல்லாம் செயலன்றோ? கிருஷ்ணகுமாரி பிறந்தவுடனே அவள் மணாந்தால் சுகுணசிங்கையே என்றல்லவோ எழுதி யிட்டியிருக்கிறான். இவனைப் பார்த்தவுடனேயே ப்ரதாபசிங்கு தன் மருமகனிடம் தன் எண்ணத்தை வெளியிட, அதற்குச் சுகுணசிங்கு ஒப்புக் கொண்டவன் போல அவன் முகம் காட்டியதினால் மாமனும் மருமகனுமாக புறப்பட்டுக் குந்தள தேசத்திற்குப் போய் அரசனைக் கண்டு தங்கள் எண்ணங்களை வெளியிட்டு அவர் சம்மதியைக் கேட்க, அவர் சம்மதிக்கிறார். இருவரும் முகூர்த்த தினத்தை நிச்சயம் செய்து கொண்டு ஊர்களுக்கு த்திரும்பிக் கலியாணத்திற்கு ஆகவேண்டிய சமான்களைச் சேகரம் செய்தனர்.

இஃதிங்ஙன மிருக்கச் சுகுணசிங்கு அன்று விசாங்கனிடத்தில் பேசிப்பின்பு தன் மாமனை வெகு நாளாய்க்காணமையால், விந்தபுரத்தில் இருக்கிறானெனக் கேள்வியுற்று அவ்வூர்க்குச் சென்றான். நாடெங்கும் "கிருஷ்ணகுமாரிக்கும் சுகுணஸிங்குக்கும் கலியாணம் நடக்கப் போகிறது." என்று வதந்தியாயிருந்தது. மறுநாள்" சுகுணஸிங் கொலையுண்டான்!!" என்ற சமாசாரம் காற்றிருக்கு மிடமெல்லாம் சென்றது. ப்ரதாபஸிங்கு காதில் பட்டதும் இவன் நிலமையை என்னென்று சொல்வது! அந்தி காலத்தில், பேத்திக்குக் கலியாணம் முடித்துவைத்து அவர்கள் கொஞ்சுவதை ப்பார்க்கப் போகிறோம் என்ற எண்ணத்துடனிருந்தவன். காதிற்பட்டதும் இன்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து, அறிவிழந்து, உள்ளமுருகிக் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று நினைத்து, மனந்தாங்காமல் கிருஷ்ணகுமாரியை க்கூப்பிட்டு என் கண்ணே நான் எண்ணியது முடியவில்லை. எனக்கு வயதோ ஆய்விட்டது சென்ற. சில நிமிஷங்களாக, மாரடைத்துக் கொண்டே வருகிறது. பருக நீர்கொணு, என்று சொன்னான். அவள், பாட்டியிடம் நடந்தவைகளைச் சொல்லித் தண்ணீருங் கையுமாய் வந்தார்கள். ப்ரதாபஸிங்குக்குப் பெருமூச்சு வாங்குகிறது. ஆயினும் தன் பேத்திவரவைப்பார்த்து கண்ணைத்திறந்து, கைகளைத் தன்வசம் கொடுக்கும்படி சைகை காட்ட, அவ்வாறே கொடுத்த மென் கரங்களைத்தன் செம்முகத்தோடு சேர்த்து க்கண்ணீர் சொரிந்து, தன் பெருங்கடனை த்தீர்த்தனன்.

[நாம் ஒருவனிடம் கடன் வாங்கின் திருப்பவேண்டு மன்றோ? நமது உயிரும் உடலும் கடன்தானே!!] இப்போது கிருஷ்ணகுமாரி அடைகாப்பில்லா முட்டையானாள்.

அத்தியாயம் 7.

குந்தளபுரத்து ராசகுமாரன் தன் மாமனைப்பார்க்க விந்தப்புரத்திற்குப் போனானென்றும் பிறகு கொலையுண்டானென்ற வதந்தி பரவிற்றென்றும் போனவியலிற் சொன்னோம் அவ்விராசகுமாரன் எவ்வாறு கொலையுண்டான். குந்தள புரத்து அரசனது மைத்துனன் ஒருவன் இருந்தான். அவன் சந்தான புரத்து அரசன். அவன் செய்த அக்ரமங்கள் அவ்வூராரை இவனைத்துரத்தச்செய்தன. யாதுசெய்தும் இவன் குடிகள் அடங்காமல் பரதேசத்து அரசனைத் துணைவனாக்கிக் கொண்டு இவனைத் துரத்தினர். அதைக் கண்ட குந்தளதேசத்தரசன் இவன் மீது மனமிரங்கி இருசிறு கிராமங்களைக் கொடுத்தான். இங்கும் அதேமுடிவே ஆதலால் வேறே போக்கிடமின்றி ஜாதபுரம் வந்து சேர்ந்தான். இவனை இன்னானென்று இங்கு யாவரும் அறிந்திலர். இங்குள்ள சோம்பேறிமடத்தில் சேர்ந்தான். இப்பொழுது இவன் படும் கஷ்டங்கள் சொல்லி முடியாது. நிரப்பு ஒருவனுக்கு கஷ்டத்தைத் தருவதாயினும் அது அவனுக்கு பின்பு அளவிலா உயர்வையோ அல்லது தாழ்வை

யோ விளைக்கும். உயர்வும் தாழ்வும் அதன் ஆள்பவனைப் பொறுத்தது. இவனுக்கு எதை விளைத்தது என்று பார்ப்போம்

இவன் படுங்கஷ்டங்களை நீக்கிக்கொள்ள வேண்டி இரண்டு உபாயங்கள் செய்தான். ஒன்று, மீகாமனில்லா மரக்கலம்போல் தவிக்கும் அம்சபுரத்தைக்கைப்பற்ற வேண்டுமென்பது. அப்பட்டம் தற்காலம் கிருஷ்ணகுமாரியினது. அவளைக்கொண்டவன் அம்சபுரத்தையும் கொண்டவனாவான். ஆதலால் அவளை மணந்து கொள்ள வேண்டுமென்பது. மற்றொன்று, குந்தளபுரத்தைத் தன்வசமாக்கிக் கொள்ள வேண்டுமென்பது. "போதந் தனங்கல்வி போன்ற வருங் காலத்து மாதர்மேல் வைப்பர் மனம்" என்றபடி இப்பொழுது தான் இவனது அழிவிற்கு ஆரம்பம். மேற்கூறியபடி இவன் எண்ணிக் கொண்டிருக்கையில், இவன் எண்ணமெல்லாம் வீணும்படி கிருஷ்ணகுமாரிக்கும் தனது மருமகன் சுகுணசிங்குக்கும் கலியாணம் நடக்கப்போகிறதென்ற சமாசாரம் இவன் காதிற்கு எட்டியது. ஆதலால், ஒரு வழியும் தோன்றாமல் நிற்கையில், தன் மருமகனாகிய சுகுணசிங்கு "மாமா, எங்கு உன்னைக் காணவில்லை, உன்னைப் பார்த்ததும் என் மனது த்ருப்தி அடைந்தது. என் தாயார் உன்னை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். என் தகப்பன் உன்னைக்காணாது வலக்கை முறிந்தவர் போல் தவிக்கிறார். வா. வாகனாதிகள் தயாராயிருக்கின்றன." என்று ஓடி வந்து சொன்னான்.

இவ்வாறு அவன் சொல்லும் பொழுதெல்லாம் இவன் "இது தான் சரியான சமயம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும். சுகுணசிங்கனைக் கொன்று விட்டால் நாம் குந்தளபுரம் அம்சபுரம் இவ்விரண்டிற்கும் அரசனாவதோடு கிருஷ்ணகுமாரியையும் மனைவியாக்கிக் கொள்ளலாம்" என்று மனதில் நிர்மானித்தான். இவன் "எல்லாம் நமைபாருபீசன் செயல்" என்பதை யறியான் போலும். பிறகு சுகுணனைக் கொன்று விட வேண்டுமென்ற எண்ணத்துடன் அவனுடன் வந்தவர்களை யெல்லாம் அனுப்புவித்து விட்டு, இவர் இருவருமாக ஓர்காட்டின் வழியாகச் சென்றனர். சுகுணன் தன் அம்மான் எண்ணத்தை யறியான். நடுக்காட்டைச் சேர்ந்தவுடன் இருவரும் களைப்பினால் ஓர் மரத்தடியில் தங்கினர். அரசகுமாரன் கண்ணயர்ந்தான். இதுவே சமயமென மதித்துத் தன் உடைவாளை அவன் கழுத்தில் இறக்கத் துணிந்தான் அம்மான். ஆயினும் இவன் செய்கையைக் கண்ட அவ்வனப் பறவைகள் ஆற்ற மாட்டாது இட்டன பெருஞ்சத்தத்தை! இச்சத்தத்தினால் விழிப்புண்ட சுகுணன் தன் அம்மான் தன்னை வெட்ட ஓங்கின உடைவாளுடன் நிற்பதைப் பார்த்து ஒன்றுந் தெரியாதவனாய் மெய் நடுங்கி, நாக்குழறி, "மாமா நான் என்ன பிழை செய்தேன், நான் ஒன்றுஞ் செய்ய வில்லையே; நீ உடம்பு சரியில்லாதிருந்த காலத்து, என் வேலைகளை யெல்லாம் விட்டு உன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, எனக்கென நந்தனபுரத்து அரசிளங்குமரியால் நெய்து கொடுத்தனுப்பப்பட்ட பட்டுக்கைக்குட்டையினால் உன் நெற்றி

வியர்வையை அன்புடன் துடைத்தேனே! என்னை ஏன் கொல்லப் போகிறாய். இதனால் உனக்கு என்ன பலன்? இதனால் அடையக் கூடிய பயனை என்னைக் கொல்லாமலே அனுபவித்துக் கொள். நீயே பட்டத்தை ஆளு. ஐயோ! எனக்கு அப்பாவையும் அம்மாவையும் பார்க்கவேண்டும். அதுவே வேண்டாம். எனக்கு ஞானக் கண் திறந்த உபாத்தியார் என்னைக்காணாவிடில் தவிப்பாரே! உன்னை அழைத்துக் கொண்டு போய் ஊரில் சுகமாயிருப்பதற்காக வல்லவோ இங்கு வந்தேன். எனக்குக்கலியாணமென்பது தெரியாதா? நீ அதைப்பார்த்து சந்தோஷிக்க வேண்டாமா," என்று பலவாறாகச் சொல்லி மாமன் கால்களிலே விழுந்தான். முகவாய்க் கட்டையை பிடித்துக் கொண்டான். இதெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்கே போலாயிற்று அவன் மாமனுக்கு. ஆதலால் வெட்டுவதற்குக் கத்தியைப் பாதி இறக்கினதும் சதுரான் அங்கு வேறு யாருமின்மையால் அங்கிருக்கும் பட்சிகளைப் பார்த்து "ஏ பட்சிகளே! என்னை என் மாமன் கொன்று விடுவான். ஆதலால் நீங்கள் என்னூருக்குப் போய் என் பெற்றோர்களிடம் நான் வயிற்றுப் பசியிலேயும் மாதா பிதாக்களைப் பாக்க வேண்டுமென்கிற ஆவலுடனும் இறந்தேனென்றும், என் குரு நாதனுக்குக் குறைவறக் கொடுத்து நடப்பிக்கும்படியாக அவர்களை நான் வேண்டினதாகவும் சொல்லுங்கள்" என்று சொல்லி வாய் மூடினதும் அக்கொடுங் கத்தி அவன் தடக் கழுத்தை இட மார்பினின்றும் பிரித்தது.

அந்தோ! யாது மறியாப் பாலன் கொலையுண்

டான்! இவன் செய்கை பெயர்க்குத் தகுந்ததே. பற்றி யெரியும் பாலைவனத்தை கெங்கா பவானி யென்றாற் போலும், வயிற்றிற்கு இல்லாமல் இரந்து திரிவோனை தனபாலன் என்றாற் போலுமிருக்கின்றதே! தர்மசிங்குக்குப் பாடு கிடையாதா? தர்மசிங்கு தன் மரு மகன் கொலையுண்டதை அறியான் போல நடித்துக் "காட்டில் யாராலோ கொலை யுண்டான் என் அருமை மருமகன். இனி நான் இருந்தென்ன போயென்ன" என இவ்வாறு பொய்த்துயர்கொண்டாடி, மருமகனை ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு குந்தளபுரம் சேர்ந்தான். இதைக் கண்ட பெற்றோர்கள் உடல்கள் வெடித்து, உயிர்கள் உடையானைச் சேர்ந்தன. இனிப்பெற்றோர்களுக்குத் துக்க முண்டோ! இப்பொழுது எண்ணிய எண்ணங்கள் பலித்தன என நினைத்தான் தர்மசிங்கு. யாதொரு கஷ்டமன்னியில் அரசனானான். ஐயோ! இந்த ஆசை எதற்கு? இது ஓர் தவளை தன்னை இரையாக்கிக்கொள்ளும் ஓர்பாம்பின் வாயிலகப்பட்டு, தலையும் மற்றுஞ் சில பாகமும் வெளியிலிருக்கும் போது தனது நிலையை மறந்து, தன் வாய்க்கருகில் பறக்கும ஈ யொன்றைத் தின்னக் கொள்ளும ஆசையை யொத்த தன்றோ?

இப்படி யிருக்கத் தர்மசிங்கனது ஆளுகைக்கு விசாங்கனது தோற்றது. தர்மசிங்கனைச் சிங்க மென்றும் விசாங்கனைப் புலியென்றுஞ் சொல்லலாம். பலவிருட்சங்களை ஏராளமாகக் கொண்டுள்ள பெரியதொரு தோட்டத்தில் காக்கை விரும்புங்கனி வேபன்றோ? உத்தமவரசர்கள், பலரிருந்தும் விசாங்க

னது ஆப்தமித்ரன் தர்மசிங்கனே! இருவரும் உயி ரொன்றும் உடலிரண்டாகவு முடையவர்கள். இவ் வாறு வருஷமொன்று கழிந்தது. தர்மசிங்கு இனி எண்ணத்தை வெளியிடலாமென்றெண்ணி, தான் விசாங்க புத்ரியை மணந்து கொள்ள ஆவலுடனி ருப்பதாகத் தெரிவித்தான். விசாங்கன் தன் குமா ரி சம்மதிப்பாளென்று நினைத்து, அதற்குடன் பட் டுத் தாமசிங்கனுக்கு மணம் செய்து கொடுப்பதா கத் தெரிவித்தான். இதுவிஷயத்தைக் கிருஷ்ணகுமா ரிக்குத் தெரிவிக்க வேண்டித் தூதுவரைப் போக்கி னன்.

அத்தியாயம் 8.

முன்பு கிருஷ்ணகுமாரியை அவள் பாட்டன் இறந்ததோடு நிறுத்திவிட்டோம். பாட்டனிறந்து விட்டானென்றால் பாட்டியுமிறந்தவள் தானே! ஆத லால் ஆதரிப்பாறின்றித் தவித்தனள். தன் பாட் டன் மரணத்திற்குத் தானே காரணமென வுன்னித் துயருற்றனள். ஆயினும், அவ்வூரார் அவளைக் கண் ணெனக்கொண்டு அவளையே வரசியாக்கி அவளுக்கு யாதொரு குறையுமின்றி நடத்தினர். அவர்களும் இவளுக்குக் கணவனென வரிக்கப் பெற்ற சுகுண சிங்கு இறந்ததைப் பற்றிப் பெருந்துயர் கொண் டாடி, அவ்வூரிலுள்ள சான்றோர் ஒன்று சேர்ந்துத் தம்மரசிக்கு நல்ல கணவ னொருவனைத் தேடவாரம் பித்தனர். இவ்வாறிருந்து வருகையில் ஒரு நாள்

கிருஷ்ணகுமாரி தன் சேடியர்களோடு உத்யான வனம் புகுந்தனள்.

அவர்களுள் கமலா வென்பவளைப் பார்த்து மனந்தாங்காத் துயரத்துடன் "எனக்குப்புருஷனாக வரிக்கப் பெற்ற சுகுணசிங்கு 'இறந்த காரணமென்ன? உனக்குத் தெரியுமா?" வென்று கிருஷ்ண குமாரி கேட்டனள். அதற்கு "அம்மா! அவரது அம்மான் குந்தளபுரத்தை ஆளவேண்டி அதற்கு இளவரசாகிய சுகுணசிங்கை நடுக்காட்டில் கொன்றனராம். இப்பொழுது அந்த நாட்டை ஆளுபவர் அவர் அம்மானே. இந்த சமாசாரம் மட்டில் உண்மை. மற்றைய கொலை செய்த விஷயம் எப்படியோ தெரியவில்லை. கொலைசெய்த விஷயம், சில பட்சிகள் வந்து ஊரில் செய்த சப்தத்தைக் கேட்ட பட்சி பாஷை யறிந்தோர் மேற் சொல்லியவாறு சொல்லியதாகச் சொல்லினராம்." என்று விடை பகர்ந்தாள் கமலா. இதைக் கேட்டதும் அறிவு கலங்கி "அவரைக் கொன்றபாவி உயிருடனு மிருக்கிறானே? கொன்றதற்குப் பலனை நாட்டையு மடைந்தானே?" என்று ஆத்திரக் குரலுடன் பேசினள்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் உத்யான வனக் காவலர்கள் "அம்மா! ஜாதபுரத்துக்கொடியுடன் விருதுகளோடு யாரோ வருகின்றார்கள்" என்று வணக்கமுடன் கூறினர். தன் பிதா வருகிறாரென்று உன்னி எதிர் கொண்டுசென்றாள். அதில் அவள் தகப்பனைக் காணவில்லை. ஆயினும் மிகுந்த அந்தஸ்துடன் விளங்கின வொருவன் வாகனத்தை விட்டி

றங்கி இவள் முன் முழங்காற் பணிந்து இவள் பாற்றிருவோலை யொன்றைக்கொடுத்தனன். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அதன் உட்சமாசாரங்கள் அடியில் வருமாறு ஓடின.

மங்களம்.

ஜாதபபுரம் அரண்மனை
கர. ஆனி. 7௳

என் பிரியமுள்ள கிருஷ்ணகுமாரிக்கு மேன்மேலும் ஐஸ்வர்யப் பெருக்கமும், ஆயுள் விருத்தியும், தீர்க்க சுமங்கலித்வமும், உண்டாவதாக ஆசிர்வாதம். உன்னைப் பார்க்க வேண்டுமென்கிற அவா மேலிட்டிருக்கிறது. உனக்குக் கல்யாணத்திற்காகப் போனவருஷம் பட்ட முயற்சிகள் தெய்வானுகூலமின்மையால் இனிது முடியவில்லை. ஆயினும் அக்கிளையிலேயே அவரினும் மேம்பட்டவரில்லாத சுகுணனது அம்மான் தர்மசிங்கை உன் கணவனாக்க நிச்சயித்திருக்கிறேன். அவரது மகிமைகளைப்பற்றி நேரில் சொல்லுகிறேன். இக்கடிதங் கண்ட தட்சணமே யாதொரு தடையன்னியில் புறப்பட்டுவரவும். எனது வேலைத் தொந்திரவினால் நான் வரவொழியவில்லை. ஆதலால், இவர்களை யனுப்புவித்தேனே வரலாமோ வரக்கூடாதோ வென்று அஞ்சாதே.

உன்வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்

தகப்பன்,

விசாங்கன்."

இக்கடிதத்தைப் பார்த்தவுடன் முதற்பாதியி லுள்ள சமாசாரத்திற்காக சந்தோஷப்படுவதாவெ ன்றும், பிற்பாதியைப்பார்த்தவுடன் துக்கப்படுவதா வென்றும் அறியாதவளாகி, தன் சேடியருள் கமலா வைக்கூப்பிட்டு "என்னை என் தகப்பனர் தர்மசிங் குக்குக் கொடுக்கப் போவதாக எழுதியிருக்கி றார்!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள். இவை யெல்லாங்கண்ட தூதுவர் முதலியோர் யாதும் விளங்கா நின்றனர். உடனே உத்யானவனம் விட்டு அரண்மனை சேர்ந்து சமஸ்தான மந்திரி ப்ரதானி முதலியோரைக் கூட்டிவரச் செய்தனள். அவர்க ளும் இவ்வாணையைத் தம்மேற் கொண்டு தொட்ட வேலையை விட்டு விட்டு அரண்மனை சார்ந்தனர். அவர்கள் கூடினதும் கிருஷ்ணகுமாரி தன் தகப்பன னுப்புவித்த காகிதத்தை அவர்கள் முன்னிலையில் இட்டாள். அதை, அவள் உத்திரவு பெற்று மந் திரி படிக்கத் தொடங்கினர். கேட்போர்கள், வாச கத்தின் இனிமையையும் சுவையையு முண்டு, கல்யா ண மென்று படிக்க ஆரம்பித்தவுடனே அவர்கள் முகங்கள் வெளுத்தன. தர்மசிங்கு யென்ற நாமம் கோட்டான் குரல் காதிற் பட்டது போல "நாரா யண நாராயண" என்றனர். படித்து முடித்தவுடன் எல்லோரும் ஒரே குரலாக "எங்களுக்குச் சம்மதமி ல்லை. அரசியை யனுப்போம். நாங்கள் வேறு ஓர் ஸன்மார்க்கனுக்கு எம்மரசியைக் கொடுக்கப் போகி றோம். ஆதலால் கனம் பொருந்திய தாங்களெல்லோ ரும் விருந்துண்டு ஊருக்குச் செல்லுங்கள். அவரி

டம் எம் கருத்தைத் தெரிவியுங்கள். மனஸ்தாபம் வேண்டாம்.'' என்று தூதுவர்பாற் கூறினர்.

இதற்கு அரசியும் உட்பட்டனள். பிறகு வந்தவர்கள் விருந்துண்டு அரசியையும், அவள்பால் குடிகட்குள்ளவன்பையும் வியந்து அவளே அரசி! இவர்களே குடிகள்! இத்தகைய நாடல்லவோ நாடு எனப்படுவது! என்று நினைத்து ஜாதபபுரத்திற்குத் திரும்பினர். விசாங்கன், தூதுவர்களின் கிருஷ்ண குமாரியோடு கூடிய வரவை, எதிர் பார்த்தனன். அப்பொழுது அவர்களை அவளின்றி வருவதைப் பார்த்து மிகுந்த கோபத்துடன் ஏன் அழைத்து வரவில்லை? வழியிலுள்ள யாற்றைக் கடக்க முடியவில்லையா? அல்லது வழி தெரியவில்லையா? என இவ்வாறாக வினவினன். அதற்கு அவர்கள் அங்கு நடந்தவற்றை எள்ளளவேனும் தவறாது உரைத்தனர். இதைக் கேட்ட வரசன், அவளைப் பொருது மீட்டு வரும் சக்தியற்றவனாகித் தர்மசிங்குக்கு நடந்த வற்றையெல்லாம் சொல்லியனுப்பி, தன்னால் கிருஷ்ண குமாரியை அவனுக்கு மணம் செய்து வைத்தல் முடியாது யென்றும சொல்லியனுப்புவித்தனன். இவளுக்காக வேண்டி அளவிலாப் பாதகத் தொழில்கள் புரிந்த தர்மசிங்கிடம் இச்சமாசாரத்தைச் சொன்னதும் கோபாக்ராந்தனாகி "அவள் எனக்கு இருவகையிலும் உரியவளாகின்றாள். எவ்வாறெனில், அவள் தகப்பன் எனக்குத் தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறான். அது ஒன்று. ஏற்கனவே அப்பெண்ணை இப்பட்டத்திற்கு உரிமையாக்கியிருக்கின்

றான். சுகுணசிங்கிருந்தால் இத்தனை நாள் அவனுக்குக் கொடுத்திருக்க மாட்டார்களா! அவனதிடத்திற்றுனே இப்பொழுது நானிருக்கிறேன். ஆகலால், எனக்கு முரியவள் தானே! நீங்கள் போய் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறது அல்லது யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறது, கேளுங்கள்?" என்று தன் தூதுவனொருவனை அனுப்பினான்.

"பலநாட் பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசி போல் வேர்க் கொள்ளாதே."

என்றபடி அவனது கடு மொழிகளைக் கேட்ட விசாங்கனும் யுத்தத்திற்குத் தயாரானான். இம்மாதிரியாக மூன்று நான்கு வருஷங்களாக விடாச் சண்டையாகவே யிருந்தது. இனிச்சண்டைக்கு அனுத்த விசாங்கன், தன் நகரத்துள்ள சிற்சில பெயர் வழிகளைக் கூப்பிட்டு ஆலோசனை செய்யத் தொடங்கினான்.

அத்தியாயம் 9.

பிற்றை நாட்காலையில் விசாங்கன் தன் நகரிலுள்ள ஒவ்வொரு வருணத்தின் தலைவரையும் கூப்பிட்டு ஆலோசனை பண்ணத் தொடங்கினான். இதில் வெகு காலமாய்த் தலைமுறை தத்வமாகப் போர்வீரர்க்குரிய வம்சத்தில் பிறந்த ராஜபுத்திரனொருவன் எழுந்திருந்து "மகாராஜ்! யோசிக்கவேண்டாம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு. இன்றைக்கிருப்

பாரை நாளைக்குக் கழிறோம். ஆனல் வாய் இல்லா விடிற் பக்கிரி. நாம் சண்டையை விடவேண்டாம் அதன் முடிவைப் பார்ப்போம். அப்படியே நாம் தோற்றுபோதிலும், பகைவர் உட்புகுமுன்னமே நாம் ஒவ்வொருவரும் கத்திக்கிரையாகலாம். மானபூ ஙதயின் வாழ்வை முன்னினித்த. கேவலம் இந்தச் சிறுசண்டைக்குப் பயந்தால் அஞ்சாத போர்ச்சிங்கம் என்னும் பெயர் நமக்குத் தகுமா. வாருங்களையாவே? சேனையைக்கூட்டுங்கள் மறுபடியும். இந்தடவை பவர்களைத் தவிடு பொடியாக்கிவிடுகிறேன்" என்று சொல்லித் தன் உயிரைத் துரும்பனவா மதித்து உருவிய கத்தியுடன் நின்றான். [இதுவல்லவோ க்ஷத்ரிய தர்மம்!]

உடனே, அவ்வூரிலேயே நெடுநாளாக, பருப்பு, உப்பு, புளி முதலியவைகளை ஒன்றிற்குப் பத்தாக விலைவைத்துச் சாமான்களை ஒன்றிற்குக் காலாக நிறுத்துக் கொடுத்து ஊர்த்தாலியை வேரோடறுக்கும் வைசிய னொருவன் எழுந்திருந்து "மகாராசனே! இந்த நஷ்டம் நமக்கெதற்கு? காலமோ கருப்புக்காலம். அவர் சொல்லுகிறபடி சண்டை செய்தால் சங்கடங்கள் நேரிடும். எதிராளிகளோ முரடர்கள். சண்டையிலே நம்மைக் கண் காது முகம் இவைகளில் இஷ்டமானபடி யடிப்பார்கள்! இதுதான் சண்டைக்கழகா? இப்பேர்க் கொத்தவர்களுடன் சண்டை செய்வதில் என்ன பயன்? நான் சொல்லுவதைக் கேளுங்கள். சண்டையும் வேண்டாம் சச்சரவும் வேண்டாம். சமாதானமாகப் போவோம்.

காதுங்காது வைத்தாற்போல நேராகக் குந்தளபுரம் போவோம். "எப்படியாவது கிருஷ்ணகுமாரியைக் கொண்டுவந்து தருகிறோம். பதினாயிரம் கட்டிவராகன் தருவீரா?" என்று தர்மசிங்கைக் கேட்போம், அப்படியே, ஒன்று, அரை குறைத்துக் கொண்டாலும் கொள்ளட்டும், அல்லது குறைந்தால் உப்பு, புளி சாமான்களை வாங்கி வந்து விடலாம். அவைகளைக்கொண்டுவந்து செட்டாக வித்துப் பணம் சம்பாதிக்கலாம். உங்களுக்கு அந்த ஸ்ரமம் வெண்டாம். என்னிடத்தப் பணத்தை ஒப்படையுங்கள். நீங்கள் நூறு வருஷம் கழித்துக் கேட்டபோதிலும் வட்டியைத் தள்ளிக் கொண்டு கொடுத்துவிடுகிறேன். இது வேசரி. பணத்தை விடவா பெண் உயர்ந்தவள்? மனதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வாங்கள் இப்படியே புறப்படலாம். நான் வீட்டிற்குக் கூடப் போக வேண்டியதில்லை. இங்கேயே சாப்பிட்டு விடுகிறேன்" என்று ஜாதிக்குரிய குணத்தோடு சொன்னான்.

இவனுட் கார்ந்தவுடன் கால்களிலிடிக்கும் வீசையுடன், கருத்த பாமிச பர்வதம்போன்ற ரோகிலனொருவனெழுந்திருந்து "மகாராஜா! நமது உப்புப்புளி செட்டியார் சொல்லுகிறபடி கிருஷ்ணகுமாரியைக் கொண்டுவர முடியமானால், அவளைக் கொண்டுவந்து விடுங்கள். அவள் அவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்கிறாளோ, இல்லையோ தெரியவில்லை. இச்சங்கடங்களை யெல்லாம் விட இம்மாதிரி செய்தல் நன்மை. அவளாலேதா

னே சண்டையுண்டாகிறது. அவள் ஒழிந்தால் சண்டை கிடையாதே. ஆதலால் அவளை ஒரே பாடாகத் தீர்த்து விடுவோம்'' என்று வாய் கூசாமல், மெய் நடுங்காமற் சொன்னான். இவனோ இருஜாதிக்குப் பிறந்தவன். தூக்கு மரத்தில் வேலை பார்க்கிறவன். காக்கையைக் கருப்பென்னக் கண்ணாடி வேண்டுமா? இப்படிபாவி சொன்னது இவன் அந்தஸ்துக் குறித்தே! இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் க்ஷத்ரியன் "இந்தத் துஷ்டனதுயிரை யுடனே மாய்த்துப் போடுவேன்'' என்று சொல்லித் தன்னுருவிய கத்தியால் அவ்ரோகிலனை உடல்வேறுதலைவேறாகச் செய்தான். இதைக் கண்டதேவர்கள் பூமாரி சொரிந்தார். இவை யெல்லாம் பார்த்திருந்த செட்டியார், மெதுவாக நழுவி வெளியே வந்து சில நிமிஷம் உட்கார்ந்து மனதைத் திடப் படுத்திக் கொண்டு கைகால் நடுநடுங்க வீடு வந்துசேர்ந்தார் இனி இவ்வூரிலிருந்தால் உயிர்க் கேடு ஸம்பவிக்குமென நினைத்துத் தன் பெண்டு பிள்ளைகளுடன் அவ்விரவே நூறு மைலுக் கப்பாலுள்ள ஓர் சிறு கிராமத்தையடைந்தார். அங்கும் இதே வியாபாரம். செட்டியார் முதல் மாணாக்கனைச் சேர்ந்தவராதலால் வாங்கின கடனைக் கொடுப்பதே யில்லை. இதல்லவோ, ஆண்மைக்கழகு! இது இவ்வாறு நிற்க, விசாங்கன், ரோகிலன் சொல்லியதே சரி என நினைத்து, கிருஷ்ணகுமாரியைக் கொன்று விடுவதே நன்மையெனத் தீர்மானித்தான்.

நடந்தவைகளை யெல்லாம் செவ்வனே யுணர்ந்த வந்தணர் ஒருவர் எழுந்திருந்து தன்னாலான மட்டில்

“ராஜாவே! கொலை மாபாதகம். வேண்டாம். எல்லா பீசன் செயல். நடக்கிறபடி நடக்கட்டும். கொலை வேண்டாம்” என்று சொன்னார். அதை விசாரகன் பொருட்டாக வெண்ணிலன். ஆதலால் அந்த அந்தணன் இவனிடம் உள்ள சொத்துக்களை அபகரித்துக்கொண்டு இவ்வூரைவிட்டு ஓடுவதே சரியென நினைத்து “ராஜாவே! நீங்கள் உங்களிஷ்டமானபடி செய்யுங்கள். ஆனால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு பாவத்திற்கும் பரிகாரமுண்டு. இதற்குப் பரிகாரமாக, என் வீட்டில் புத்ரனிருக்கிறான். அவன் கனம் வாசித்த கனபாடிகள். வியாகர்ணத்தில் நிபுணன். அவனைக்கண்டதும் பாபம் ஓடும். என் மைத்துனன் ஒருவனிருக்கிறான். அவன்தான் மனுசாஸ்த்ரம் ஏற்படுத்தினவன். அவனைக் கண்டால் பழியஞ்சும். இவரிருவர்க்கும் கிருஷ்ணகுமாரியைப் போல இரண்டு தங்கப்பாவைகள் வார்த்துத் தானம பண்ணுங்கள். என் விஷயங்கள் கிடக்கட்டும். அன்னம் போட்டு, நான் உட்காரத் தங்கப்பீடம் ஒன்று கொடுங்கள். மேற்பட்டுச் செய்வது உங்களிஷ்டம்” என்றனன். இதைக்கேட்ட வரசன் பழி பாபம் அய்யரோடு போகட்டுமென்று கொண்டு அவர் சொல்லியவாறே செய்தனன். அவ்வந்தணர்களும் கிடைத்ததைக் கொண்டு, கொல்லை வழியாகப் போய் வேறோரூரை யடைந்தார்கள்.

மனிதனைத் தின்னுமியல்புடையர்களான கானிபால் ஜாதியரையும், தெய்வமே யில்லை யென்று சாதிக்கும் * நீரீஸ்வர ஜாதியரையும், சீர்திருத்தி, தம்

* Athiest.

யனைய மனிதர்களையும் மிருகங்களையும் நேசிக்கவும் இயேசுவையே தொழுதுவரும்படியும் செய்து வுலகத்திற்குப் பல நன்மைபுரிந்த கிறிஸ்துவப் பாதிரியரொருவர், இந்தச் சங்கதிகளை யெல்லாம் கேள்வியுற்று விரைந்து ஜாதபுரம் வந்து இன்னுயிரொன்றைக் காப்பாற்ற வேண்டி விசாங்கனிடம் "ராஜதுரையே? அப்பன்மகனே? நீ அப்பன் பொற்பிரமாணத்தை யறியாயோ?

"நினக்கொருவன் செய்யுமா நீ விரும்பிற்றன்னோன்
றனக்கு நீ செய்தறாகும்"

என்பதை மறந்தனையோ? உயிர்களைக் கொல்லாதே. உனக்கு அவளை வைத்திருப்பது கஷ்டமாயிருந்தால் என்னிடம் கொடுத்துவிடு. அவளைக் கன்னிமாடத்தில் சேர்த்துவிடுகிறேன். அங்கு பகைவர் பயமாவது, மற்றயோர் தீமைகளாவது அணுகா. அக்கோட்டைக்கு ஆண்டவனே காவற்காரன். அவன் தனது பக்த கோடிகளுக்கு வேண்டி சிலுவையிலுயிர் துறக்கப் பெற்றது நீ தெரியாயோ" என்று விசேஷ மதப்பற்றுடன் கூறினர். இதை யெல்லாம் விசாங்கன் கேட்கிறவனோ? தன் வார்த்தைகள் பயன் படாமையைப்பற்றி வருந்தி இவ்வூரிலிருத்தல் பாதகமாகுமெனத் தீர்மானித்து வேறூர் சென்றனர். விசாங்கனுக்கு ஒவ்வொரு நாட் கழிவதும் ஒவ்வொரு யுகமாயிருந்தபடியினால் சீக்கிரத்தில் கொலையை முடித்து விடவேண்டுமென்று, கிருஷ்ணகுமாரியை யழைத்துக் கொண்டு வர தானே போகிறான். அங்கு போய்த் தன்னெண்ண மெல்லாவ

ற்றையும் வெளிப்படா வண்ணம் மறைத்துக் கிருஷ்ண குமாரியைத் தன்னூரில் வந்து சின்னாட்டங்கியிருந்து வரும்படியாகக் கூப்பிட்டனன். அவ்வூரார், இவையெல்லா மறியாது, தன்னரசியர் போய் வரட்டுமென்று நினைத்து அவ்வாறே யனுப்பினார், அவளைக் கொண்டு ஜாதபபுரம் வந்து சேர்ந்தான். யாகத் தம்பத்திற்கு வருமாடு போல வந்தனளவ்வுத்தமியும். இத்தகைய கஷ்டங்கள் நேரிடுமென்று யாருக்காவது எண்ண முண்டோ, அப்பாதகனொருவனுக்குத்தவிற.

அத்தியாயம். 10.

இருவருமூர் வந்து சிறிது நேரம் பேசியிருந்து பின்பு மத்தியானபோஜன முடித்துக்கொண்டு, காலை ப்ரயாணத்தினிளைப்பாலயர்ந்தனர். கிருஷ்ணகுமாரி, தன் மாதா, பாட்டன், பாட்டியரிவர்களோடு சிரித்து விளையாடுவது போலச் சொப்பனங் கண்டனள். திடீரென விழித்து "அம்மா! பாட்டி!" என்றனள். இந்த வரவத்தால் துயில் விழித்துக்கொண்ட விசாங்கன் பொழுது போயினமைகண்டு தன்னெண்ணத்தை நிரைவேற்றக்காலமிதுவே யெனக் கொண்டு உடைவாளை யரையிலேந்திக் கிருஷ்ணகுமாரியைக் கூப்பிட்டுக்கொண்டு யார் கண்ணிலும் தென்படாமல் அந்தபோவனத்திற்குள் சென்றனன். அங்கிருந்த காவலர்களை வெளியேற்றினன். பிறகு இவர்களிருவர்களுமாகத் தனிமை

வாய்ச் செல்லுகையில் கிருஷ்ணகுமாரி தன் தகப்ப ஊைப் பார்த்து "அப்பா! இவ்வனத்தில் ஏராள மான புட்பச் செடிகள் இருக்கின்றனவே. அநேக புஷ்பங்கள் கீழே யிறைந்து கிடக்கின்றன. அவ ற்றைச் சர்வேசனுக்கர்ப்பணஞ் செய்வதில்லையோ? அவரைப் பூஜிப்பதினும் வேறு உயர்ந்த தொழிலிம் மண்ணுலகிலுண்டா? நான் இங்கிருக்கும் புஷ்பங் களை ஒன்ருகச் சேர்த்து மாலையாகக் கோர்த்து அம் பிகைக் கணியச்செய்யப்போகிறேன். நீயும் அப்புட் பங்களைச் சேர்" என்று சொல்லித் தன் மார்புத் துணித் தலைப்பில் அங்கிருந்த புட்பங்களை சேர்த் தாள். அச்சமயத்தில் புக்குவீடிருந்து பிறந்த வீடு வந்த பெண்போலவே யிருந்தாள். அவள் குனிந்து புட்பங்களைப் பொறுக்கும்போது அன்னங்கள் பூமி யிற் கிடக்கு நற்பழங்களைத் தங்கள் மூக்கினுல் கொத்துவது போலவேயிருந்தது. மரக்கிளைகளிலு ள்ள பட்சிகள் இவளைப்பார்த்துத் தம் புட்களுக்கு "இதோ பார்! மாதர்திலகம். நீங்களுமவளைப் போ லாவீர்கள் நல்ல பூஜையைச் செய்தால்." என்று காட்டின.

இஃதிங்ஙனமிருக்க, விசாங்கன் இன்ன செய்வ தென்று தோணுமல் நின்று கொண்டிருந்தான். இதைக்கண்ணுற்ற பெண் தன் தகப்பன் யாது கார ணம்பற்றியோ துயருற்றிருக்கிருனென்று நினைத்து, தன் மழலைச் சொற்களாலவனைத் திருப்ப முயன்று அவனருகிற் சென்றனள். சென்றதும் விசாங்கன் யாதும் சொல்லாமல் தன் உடை வாளை இவளை வெட்டுவதற்காகவோங்கினுன். ஐயோ! ஸ்தரீ ஜா

தி. பெண்ணென்றால் பேயுமுருகுமே! இவள் மனம் இப்போது எப்படியிருக்கும்! கத்தியைக்கண்டவுடன், கருடன் கண்டபாம்புபோலும், சிம்மங்கண்ட யானைபோலும் நடுங்கி "அப்பா! நீ ஏன் என்னைக் கொல்லப் போகிறாய்? நான் என்ன தப்பிதம் செய்தேன்? பெண்பாவம் பொல்லாது. உன்னைப் பார்த்தவுடன் ஆசைகொண்டு உன்னோடு வந்தேனே? நீ எனக்கு எத்துணையோ நன்மைகள் உண்டாக்குவாயென்று நினைத்தேனே? எனக்கு இவ்வயதில் சாக மனமில்லையே! நான் மணம் புரிந்து கொண்டு, கன்னிப்பருவங்கழித்துத் தம்பதி சமேதராய், உன் பாதத்தில் வீழ்ந்து உன்னாசி பெற்றுக் கொள்ள வேண்டுமென்றிருந்தேனே? உன் கடிதம் கண்டவுடன் நமது தகப்பன் நம்மை ஆசிர்வதித்து இருக்கிறார், இனிக் குறைவு கிடையாது என்றிருந்தேனே. உன் கத்தியைக் கண்டதும் என் மனம் பதறுகிறதே. என்னைக் கொல்லாதே. என்னை விட்டுவிடு. எங்கேயாவது போய் மானஜீவனம் செய்து கொள்ளுகிறேன். அப்படி நான் மத்தியிலிருப்பதுனக்குக் கஷ்டமாயிருந்தால் என்னை யிருட்டறை யொன்றில் பூட்டிவை. ஆகாராதிகளை மட்டில் கொடுத்துவா. எக்காலும் பரமனையே சிந்தித்திருந்து சமாதானத்தில் அவன் பாதமடைகிறேன். நேற்று இங்குவரும்போது இந்த வெண்ணமே யெனக்குக்கிடையாது. என் சேடியர்கள் என் வரவை எதிர்பார்த்திருப்பார்கள். என்னை விட்டு விடு" என்று கதறினாள். இதற்குக்கன் மனமுங்கரையாதோ? கரையும். இப்பாதகன் மனம்கரைந்து கத்தியை இறக்

கச்சத்தியற்றவனைக் கீழேபோட்டுவிட்டான். இதைக்கண்வுடன் கிருஷ்ணகுமாரி,

" இழந்த மணி புற்றர வெதிர்ந்ததெனல் ஆனாள்
பழம் தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்குவமை கொண்டாள்
உழந்து விழிபெற்றதோர் உயிர்ப்பொறை நிகர்த்தாள்"

பிறகு விசாங்கன் தன் சட்டைப் பைக்குள்ளிருந்த புட்டியொன்றை யெடுத்து " இதிலுள்ள திராவகத்தையாவது குடி. உன்னைநான் வெட்டவில்லை" யென்றான். பொதுவாக ஸ்திரீ ஜாதியரை அபலைகளென்றும், அவர்களைச் சரியாகவாதரிக்க வேண்டுமென்றும் ஆங்கிலர்கள் கொள்கையில்லையா? அது முற்றும் மெய்யன்றோ? கிருஷ்ணகுமாரி இனி தன்னுயிர்தனக்குத்தக்காதென நினைத்து இத்திராவகத்தை உட்கொள்ள வாயினிடம் கொண்டு போனாள். ஐயோ! இதுவிஷமாதலால் நெடிமூக்கிலேறியது. ஆயினும் "விரிமழைக்குலம் கிழித்தொளிரும் மின்னென" அவள் தன் விழிகளிலே நீர் தாரை தாரையாயோட, உதடு துடி துடித்து நடுங்க நம்பிக்கை முழுது மிழந்தவளாய் இனியாது செய்வேன் என்பாளொப்பக் கைகள் சோர்ந்து மடிந்துபோய் ஆகாயத்தைப் பார்த்து "ஏ! பெருங் கருணை வள்ளலே! இது வுன் செயலா? நானோ தாயிழந்தவள். தகப்பனோ என்னைக் கொல்லப்போகிறான். சிநேஹர்கள் எனக்கு ஒத்தாசை செய்யவோ யாருமன்னியில் ஏகாங்கியா யிருக்கிறேன். தாயு மிழந்தேன். தகப்பனோவிட்டான். நண்பரோயில்லை. அரசனுமென்னெதிரி.

'இறைவனை நம்பினோரே யிம்மையின்பமுற்று
மறுமையின் முத்திபெற்று வாழுவரளவில் காலம்.'

என்று சொல்லியிருக்கிறார்களே! நானுன்னை நம்பி யிருக்கிறேனே. நீயும் கைவிட்டனையோ" என்று சிறு புன்னகையுடன் இனித் தகப்பன் சொல்மறுப்பது நன்றன்றெனநினைத்து, அவன் பாதங்களிலே தன் தலையைச் சேர்த்தி எழுந்து உட்கொண்டனள் அவ்விஷத்தை. ஐயோ! கருவிழிகளிரண்டும் சோகங்காட்டின. கூடாரங்கள் குலைந்தன. மெல்லியவுடல் பாருங்கல்லே நிகர்த்தது. சற்று நேரத்தில் கோடையிடியுண்ட பச்சைமரம் போலானாள். சிவபதமடைந்தனள். இப்புவியிலே உத்தமியர் பிறந்துளர், வாழ்ந்துளர், இறந்துமுளர், தன் புருஷனுடன் கூடிக்குலாவி சகலவின்பங்களையுங் குறைவறப்பெற்று, பழுத்த பழமான வயதில் பிள்ளைகள் தகனத்திற்குள்ளாகி, மிகுந்த சமாதானத்திலிறந்த த்ரௌபதை, சீதை, இப்போக்கொத்தவர்களைப் பஞ்சகன்னியர் என்கிறார்களே! பிருகஸ்பதியிருக்கச் சந்திரனுடன் கூடிய தாரையும் பஞ்ச கன்னிகைகளு ளொருவளன்றோ? உலகத்தில் ஊர்வனவாம் புழுக்கள் முதல் உயர்வனவாம் மனிதர்கள் முடிய, உள்ளந்தரங்கத்தோடு நேசித்து, பூஷித்து, வாழ்த்தி நிரபராதியாய் விளங்கி, எள்ளளவேனும் உலகவின்பத்திற்காளாகாமல், பனி வெண்மையே போல் மாசற்ற மனதுடைய கிருஷ்ணகுமாரி, தன் தகப்பனால் மாண்டனளே! அவரது வார்த்தைகளைத் தன் தலைமேல் வாங்கிக்கொண்டு, விஷமுண்டு இறந்தனளே. ஐயோ! இறந்தனளா! சாயுஜ்ய மடைந்தனளே.

அவளை என்ன கன்னியென்று சொல்வது. ஆயிரம் சீதையரும், அதிலும் பதின் மடங்கு த்ரௌபதையரும் அவளுக்குக் காற்பங்காவரோ! உலகம் முடியும், சூரியன் முடியும், அவள் முடியுமோ!

முடிவு.

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்.—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங் கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு.

நீதிநெறி விளக்கம்

இப்படி கொலை முடிந்தது. இக்கொலை காரணம் பற்றி யல்லவா? இதனால் யாருக்காவது நன்மை உண்டானதோ? கொலையினால் நன்மை உண்டானால் பிறகு உலகமேது? ஈசனேது? ஊர்வனவாம் புழு முதல் உயர்வனவாம் மனிதன் முடிய ஈசனுக்கு சமமன்றோ? அவர் நமக்கு வேண்டியன தாமே தெரிந்து கொடுத்துக் கண்ணுக்கிமை போலக் காத்து வருகின்றனரே. அவரது புத்ரனும் நம்மிலொருவன் கொலையுண்டால் அவர் ஸஹிப்பரோ? கடல் கொதித்தால் விளாவ நீரெங்கே! சீறிவரும் வடவாக்கினியைச் சிறுகுட்டைத் தண்ணீர் அவிக்குமா! அடாது செய்யிற் படாது படுவனன்றோ? மங்கையர்க் கரசியாம் கிருஷ்ணகுமாரியைக் கொன்றனனே விசாங்கன். இப்போதிவன் ஈஸ்வரபராதியாயினனே?

அவன் கதியாதாயிற்று. வரும்விதிவந்தால் படும் விதி படவேண்டும். விதியை அவர் உதவியன்னியில் வெல்லமுடியுமா? இப்பாவிக்கு இனிஅவர் உதவிபுரிவாரோ? விசாங்கனுக்கு இனித்தான்பாடு இவன்செய்த சதிகொலையை நாடெங்கும் அறிவித்தான் வாயுவு பகவான். ஊரெல்லாம் இரண்டுபட்டன. இதுகூத்தாடிக்கு எளிதன்றோ? அயலரசன் விசாங்கன்மீது வஞ்சிசூடிப்பொருது சென்றுகொன்றையணிந்தனன். விசாங்கன் நாடுதுறந்தனன். "இல்லாளை இல்லாளும் வேண்டாள்" என்றபடி இவன் மனையாள் தக்ககணவனைப்பிடித்துக்கொண்டு இவனை அதோகதியாக்கினள். இப்போதுதான் விசாங்கனுக்குத்தன் நிலைமை தெரிந்தது. அதுயாது ப்ரயோஜனம். உள்ளபோது ஊர்க்கொலைசெய்து சாகும் ஸமயத்தில் சங்கரா! சங்கரா! என்றால்யாது பயன். அவன் கண்கெட்டபிறகு ஸூர்யநமஸ்காரம் செய்பவனுக்கும், குளிர்நீங்கிக் கடும்வெயில் நாளில் போர்வைகொள்பவனுக்கும் ஒப்பாவனன்றோ? இப்போது,

> "எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவமென்பது இழுக்கு"

என்பதை நினைத்துக்கதறுவான்; புலம்புவான்; மூர்ச்சையடைவான்; வாய்க்கு வந்தபடி தன்னையே நிந்தித்துக் கொள்வான். இவ்வாறாக ஒருவருட காலம் உணவாகாரமின்றி வனசரனாக விருந்தான். திரிசலின் அயர்வினால் மரத்தடியொன்றில் கண்ணயர்ந்தான். பக்கத்து அடவியிலிருந்த கொடுவரிபொ

ன்று இவன் நித்ரை புரிவதைப் பார்த்துத் தனக்கு ஆகாரமாக்கிக் கொள்ளவேண்டி, இவனை யணுகி இவன் மார்பில் ஒரே அறையாக அறைந்தது. குருதியை முகர்ந்து, யாதுகாரணம் பற்றியோ இவனைத் தின்னுமலே போய்விட்டது!! மார்பினின்றும் இரத்தம் யாருக அடிக்கொண்டிருந்தது. அப்போது விசாங்கன் "ஐயோ! அரசனென்னும் மமதையால் தலைகால் தெரியாமல் குதித்தேனே! ஈசனொருவனுளன் என்பதை மறந்தேனே! அந்தணன் கங்கபட்டன் புத்திமதிகளையெல்லாம் சினந்தேனே! லட்சுமிகுமாரியின் கண்ணீரல்லவோ இப்பாடுகளுக்குக் காரணம். என் பெண் - அருமைக்காதலி - என்னைக்கொல்லாதே அப்பா என்று மழலையுடன் கதறிய கண் மணி-மங்கையரைப் பழிக்கும் நங்கை-யாதுமறியாப்பாவி-என் குழந்தை கிருஷ்ணகுமாரியை, ஐயோ! படுகொலை புரிந்தேனே! விதியை வென்றுனே மார்க்கண்டன். எனக்கு மவ்வாறுதவி கிடையாதா? கேவலம், மனிதனை உருசியுடன் தின்னும் இயல்புடைய புலி, என்னை இகழ்ந்து விட்டதே. இவன் 'பரம சண்டாளன்' என்றல்லவோ எண்ணிப்போய் விட்டது. உளவனில்லாமல் ஊர் அழியுமா! எல்லாம் ஈசன் செயல். ஐயோ! நான் அரசனயிருந்த இப்புவியிலேயே இப்பாடுபட்டால், புழு முதல் மனிதன் முடிய ஒன்றுக நினைத்துத் தீர்ப்புச் சொல்லும் நீதிபரன் இடம் எப்பாடுபடுவேனே! நீதிபரனது பெருமையை யுணர்ந்தும் ஆகாயத்தைப் பார்க்கக் கண்கள் கூசுகின்றனவே" என்று சொல்லித் தன் கண்களை மறைத்துக் கொள்ளக் கைகளைத் தூக்

குவான். அது அஸாத்யமாகும். கால்கை அசை யாமல் அரை மணி நேரம் ஆனதும் இரத்தம் குறை யவே சோகம் மேலிட்டு நாடி தளர்ந்து கண்கள் பஞ் சடைந்து பற்கள்கிட்ட மரணாவஸ்தையிலிருக்கும் போது "வதமெனப்படுவது கொல்லாவிருதம்" எனச்சொல்லி இப்புவியை நீக்கினான். அப்போது நிசப்தமாய் இருந்தது உலகம்! மேலுலகத்தில் இவன்பாடு யாரறிவார்?

தர்மசிங்கு தன் மருமகனைக் கொன்றவன். கிருஷ்ணகுமாரி கொலைக்குக் காரண பூதகன். காணி க்கொத்தது தானே கோடிக்கும்.

"ஆவின மழை பொழிய இல்லம் விழ
அகத்தினள் நோயால் வருந்த அடிமைசாக
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன் காரர் மறித்துத் தள்ள
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்ல
தள்ளாத விருந்து வர ஸர்ப்பம் தீண்ட
கோவேந்தர் தமதுரிமை பருதி கேட்க
குருக்கள் வந்து தக்ஷணைக்குக் குறுக்கிட்டாரே"

என்னும் இப்பாட்டிலுள்ள துன்பங்கள் யாவும் ஒரு வனுக்கு ஏககாலத்தில் ஸம்பவித்தால் அவன் எத் தன்மையுடையனாயிருப்பானோ அதினும் பதின்மட ங்கு துக்காக்ரந்தனானான் தர்மசிங்கு.

இவன் உடல் குளக்கரையொன்றில் சிதறுண்டு கிடந்ததுமட்டில் தான் தெரியவருகின்றது. மேலு லகத்தில் இப்புவியில் எந்த ரூபத்தோடிருந்தானோ

அதே ரூபத்தோடிருக்கிறுனும். ஆயின் ஒன்று. அவனைக் கிங்கிரர்கள் தீயில் வாட்டியெடுக்கின்றுர்களாம். நாளொன்றுக்கு நூறுமுறை உருவெடுத்து, நூறுதரம் தீயில் வாடுகிறுனும். இவன் செய்த பாதகத்துக்குத் தகுந்த தண்டனை இது தானு!!!

இவைகளோடு மட்டிலன்று. இப்போது நாளசிங்கபுரம் இருந்த இடமே தெரியவில்லை. ஆனுல் முதலாவது அத்தியாயத்திற் கூறிய பாலைவனந்தான் பழய நாளசிங்கபுரம். அங்கே நடுநிசியில், நிசப்தமாய் இருக்கும் வேளையில் இருபது வயதுள்ள கன்னிகை யொருவள் "ஐயோ! அம்மா!" என்று ஒற்றைக்குரலோடு, சொல்லுவதைக் கேட்கலாம். அப்பெண்ணைக் கண்டுபிடிக்க, யுகக்கணக்காக முயன்றுலும் முடியாது. இது இறந்த கிருஷ்ணகுமாரியின் ஆவி யென்பார்கள் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலுள்ளவர்கள்.

இப்பாலைவனம் எப்போதும் இம்மாதிரியே யிருக்குமா? அல்ல. பராபரனுக்குக் கோபந்தணியும். அப்போது அப்பாலைவனத்தைத் தன் கருணைக் கண்களால் பார்ப்பார். அது பழய நாளஸிங்கபுரத்தைப் பார்க்கிலும் பதின் மடங்கு நேர்த்தியாயும், கண்ணுக்கினிமையாயும் ஆகிவிடும். ஏன். அது உடனேயே அம்மாதிரி செய்விக்ககூடாது? ஒவ்வொன்றிற்கும் காரணம் உண்டு. அதாவது, அதைப் பார்ப்போரெல்லாம் இது கொலை நடந்தவிடம். அதனுல் தானிம் மாதிரி யிருக்கிறது. கொலை யென்பதைச் சிந்திக்கவே கூடாது. விசாங்

கன் சாம்போது சொல்லியபடி அவருக்கு உயிர்களெல்லாம் ஒன்று. ஆதலால் ஊர்வனவாம் புழுவைக் கூட ஹிம்ஸிக்ககூடாது என்பதே. இவையெல்லாம் நோக்கியன்றோ,

> கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் [வாழ்நாண்மேற்
> செல்லாது உயிருண் ணுங் கூற்று.
>
> தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
> தின்னுயிர் நீக்கும் வினை.”

எனப் பகர்ந்துளர் மெய்த்த திருவள்ளுவனார். ஆதலின் மறங்கடிந்து அறத்தைக் கைக்கொள்வோமாக.

முற்றிற்று.